புரட்சித் தலைவர்

எம்ஜிஆர் பிள்ளைத்தமிழ்

கவிஞர்

முத்துலிங்கம்

புரட்சித்தலைவர்

எம்.ஜி.ஆர் பிள்ளைத்தமிழ்

கவிஞர்

முத்துலிங்கம்

நீரோட்டம் வெளியீடு

முதற்பதிப்பு :
1981-ஏப்ரல் வெளியீடு

விலை ரூ. 6.00

அச்சிட்டோர்:
நீரோட்டம் அச்சகம்
12, சீனிவாசபெருமாள் சன்னதி 3-வது தெரு
சென்னை—14

அணிந்துரை

தாய்த்தமிழின் தகைமைசால் இலக்கியங்களில் ஒன்று பிள்ளைத் தமிழ்! தனது உளமுள தங்கச் சிம்மாசனத்தில் வீற்றிருப்போரை தமிழில் வீற்றிருக்கச் செய்வதுதான் பிள்ளைத் தமிழ்!

பிறமொழி இலக்கியங்களில் தலைவனையோ தலைவியையோ பிள்ளையாக உருவகித்துப் பாடும் பாடல்கள் உண்டு.

ஆனால் – அவற்றை வகைத் தொகைப் படுத்தி இலக்கண வேலியிட்டு இலக்கியப் பயிராக வளர்த்த பெருமை—தமிழுக்கே!

தமிழ்-எதையும் ஏற்றுக் கொள்ளும். ஆனால் அதை இலக்கணத்துக்குள் அடக்கிக் காட்டிவிடும்!

ஏன்-காதல் எனும் கட்டுக்கடங்கா உணர்வைக் கூட இலக்கணத்துக்குள் கொண்டு வந்து பெருமையுற்றது தமிழ் மொழியே!

ஒரு மொழியின் பெருமை-அதன் பனுவல்களன்று; பகுப்புகளாலேயே! தமிழ் மொழியில் இதுவரை 40,000 பகுப்புகள் உள்ளதெ(ன) "குறைந்து மதிப்பிடுவோர்" கூறுவர்.

அத்தகு பெருமைக்குரிய ஒரு பகுப்பு தான் பிள்ளைத் தமிழ்! பிள்ளைத் தமிழில் உள்ள உள மகிழ்ச்சி வேறெந்த இலக்கியத்தாலும் கிடைக்காது.

தனது தலைவனை—தலைவியை – தாயாய்—தந்தையாய்—பணியாளாய்—ஆசானாய்—இன்னபிற உருவங்களில் கண்டு மகிழ்வதைவிட பிள்ளையாய்க் கண்டு மகிழ்வதில் தனி இன்பம் உண்டு.

பிள்ளையை குழந்தையைப் பாடும் போது வள்ளுவப் பேராசான் முதல் கவிஞர் முத்துலிங்கம் வரை தன்வயமிழப்பார்கள்; தமிழருவி தடதடவென வீழும்! அவர்களையுமறியாமல் அவர்களுக்கும் தெரியாத எழில்மிகு சொற்கள்-அழகுத்

தமிழ்ச் சொற்கள் உள்ளிருந்து வெளி வந்து விழும்! எழுதி முடித்த பிறகு-தங்களது சொற்களைப் பார்த்துத் தாங்களே வியப்பார்கள். இதன் உளவியல் உட்பொருள் என்ன?

பிள்ளைத்தமிழில் கவிஞன் தாயாக-செவிலியாக நின்று பாடுவது மரபு. ஆனால், சிலர் தலைவனைப் பிள்ளையாக்கி மகிழ்வதோடு தங்களையும் பிள்ளையாக்கி மகிழ்வார்கள். இது ஒரு நுணுக்கமான நுழைபுலம்!

எந்த ஒரு ஓவியன் தீட்டும் ஓவியத்திலும் அவனது உருவம் தானாகவே படியும். எழுத்தோவியனின் ஓவியத்திலும் அவ்வாறே! "நானே நீயாய்...நீயே நானாய்" என்பது அருணகிரியார் வாக்கு.

தலைவனே பிள்ளையாய் — பிள்ளையே தானாய் எந்தப் பிள்ளைத் தமிழ் இலக்கியம் இருக்கிறதோ அதுவே பிள்ளைத் தமிழில் உயர்ந்த படைப்பு!

கவிஞர் முத்துலிங்கம் — தனது தலைவரைப் பிள்ளையாக்கியதோடு தானும் பிள்ளையாகித் தோய்ந்து எழுதியதே இந்தப் பிள்ளைத் தமிழ் நூல்!

மன்னர்களை — மீனாட்சி அம்மைகளை — நிலப் பிரபுக்களைப் பிள்ளையாக்கி மகிழ்ந்த புலவர் கூட்டத்தில் தம்பி முத்துலிங்கம் வாய்ப்பு மிகுதியானவர்.

"கவிதை என்றால் அழகு; எம். ஜி ஆர் — அழகானவர் ஆகவே எம். ஜி. ஆரே ஒரு கவிதை" என்றார் அறிஞர் அண்ணா ஒரு கவிதையைக் கவிதையால் பாடும் மிகுதி வாய்ப்பு இந்தக் கவிஞருக்கே!

காப்புப் பருவம் முதல் கவிஞர் அழகுற நீரோடைத் தமிழில் சொல்லிப்போகும் பாங்கை மீண்டும் மீண்டும் படிக்கிறபோது இவருக்கு ஒரு காப்புப் பருவம் பாடவேண்டும் போல் தோன்றுகிறது

தட்டு நிறைய பலாப்பழம். அதுவும் தேனில் தோய்த்தவை; எந்தச்சுளை இனிப்பு என்று யார் கூற முடியும் ?

★ தமிழைப்பற்றி எழுதும் போது 'நெடியமலை பொதியமதில் இளைய மயில் தென்றலுடன் நித்தம் கைகொட்டி ஆடி ஆரோ ரா பாடுகையில் குழந்தைகளின் காதுகளில் அமுதாகக் கலந்து கூடி அன்று முதல் இன்றுவரை நின்று நிலையாகி வரும் அழகான விந்தைத் தமிழே!" என்று கூறும் கவிஞர் தமிழ்த் தேனில் ஊறிய சுளை தருகிறார்.

★ "ஆவணித் திங்களின் மழையெனக் குறிப்பறிந்து கொடுப்பாய்" என்று தலைவரைப் பாராட்டும் போது அனுபவத்தேனில் ஒரு சுளை கிடைக்கிறது.

★ 'கத்து கடலலை முத்தம் இழைத்திடும் கவினுறு புதுச்சேரி...'' எனவரும் அடிகளில் சந்தத்தேனில் குழைந்த சுளை கிடைக்கிறது.

★ உயிராய் உயிர்வாழ் உடலாய் தமிழர் உணர்வாய் ஒளியாய்...வளியாய்...விழியாய்...மொழியாய்...உருவாய் பயிராய் கதிராய்...என தலைவரைப் புகழும் போது சொல்-கருத்து எனும் தேன்சுளை கிடைக்கிறது.

★ 'நீதிதேவன் வாழுமிடம் நீணிலத்தில் எந்த இடம்? வஞ்சம் பொய்மை இலாமல் நீ வாழ்கின்றாயே அந்த இடம்' எனும் கவிஞர் கூறுமிடத்தில் கண்ணீர் வழிந்தோட உருக்கும் எனும் தேன்சுளை தருகிறார்.

இப்படி எதைக்கூற? எதைவிட? ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பலாச்சுளை. அனைத்தையும் நானே சுவைத்துக் கூறிவிட்டால், நீங்கள் சுவைக்க வேண்டாமா?

திரைப்படத்தில் கவிஞர் ஆயிரம் பாடலாசிரியராய் உயர்ந்து வருகிறார். இப்போது நூல் தருகிறார். ஆயிரம் நூல் தரும் எதிர்காலம் எண்ணி ஏங்குகிறேன்.

எங்கள் கவிஞரை ஒவ்வொரு மொழியின் சங்கமும் அழைத்து பொன்மாலையிட்டு போற்றும் காலத்தைக் கனவு காணுகிறேன். தமிழ்க் கலைமாமணி இந்தியக் கலைமாமணியாய உலகக் கலைமாமணியாய் உயரும் உயர்வுக்கு இந்நூல் முதற்படிக்கட்டு என உளமார நம்புகிறேன்.

வாழ்க கவிஞர்!
வாழ்க கவிதை!
வாழ்க தமிழ்!
வாழ்க தலைவர்!

அன்பின் மிக்க,

-அடியார்

கவிஞர்

முத்துலிங்கம்

என்னுரை

தமிழிலுள்ள தொண்ணூற்ருறு வகைச் சிற்றிலக்கியங்களில் பிள்ளைத்தமிழும் ஒன்று. பலாமரத்து நிழலில் மட்டுமே வேங்கைப்புலி படுத்துறங்க நினைப்பது போல—பனை மடலில் மட்டுமே கூடுகட்ட அன்றில் பறவை ஆசைப்படுவது போல பொன்மனச்செம்மல் மேல் மட்டுமே பிள்ளைத் தமிழ் பாட ஆசைப்பட்டேன்.

நெல்லிக்கனியும் மாங்கனியும் குயிலுக்குப் பிடிக்குமென்ருலும் மாங்கனியைத்தான் குயில் மிகவும் விரும்பி உண்ணும். பலபேர் குயில் கனியுண்ணுது என்று தவருன கருத்துக் கொண்டிருக்கிருர்கள்.

பொன்மனச் செம்மலைப் போல் நன் மனம் கொண்டவர்கள்—பாட்டுடைத் தலைவராவதற்குத் தகுதியுடையோர் பலர் இருந்தாலும் மாங்கனியை மாங்குயில் மிகவும் விரும்புவதைப் போலே செல்வம் மலிந்த சென்னையை விட சிற்றூர்ப் புறங்களையே மிகவும் விரும்பிய இராமலிங்க அடிகளைப் போலே நான் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பாடவே மிகவும் விரும்புகிறேன், ஏனெனில் அவர் ஓர் பலாமரம்.

மனிதர்களை நான்கு வகையான மரங்களுக்கு ஒப்பிடுவார்கள். அவை பலாமரம், கமுகு மரம், மாமரம், பூவரசமரம் என்பவையாகும்.

மாமரம் நிறையப் பூப்பூக்கும். ஆயிரக்கணக்கான பூக்கள் பூத்தால் நூற்றுக் கணக்கான பூக்கள் உதிர்ந்து விடும். மீதமுள்ள பூக்கள்தான் பிஞ்சாகிக் காயாகிக் கனியும். அதைப் போல் சிலர் நிறையவே சொல்வார்கள். ஆனால் குறையவே செய்வார்கள். இவர்கள் மாமரத்துக்குச் சமமானவர்கள்.

கமுகுமரம் தண்ணீர் ஊற்றினால்தான் பலன் கொடுக்கும். அதுபோல் நாம் ஒரு உதவி சிலருக்குச் செய்தால்தான் அவர்கள் திருப்பி அதற்கீடான உதவியைச் செய்வார்கள். இத்தகையவர்கள் கமுகு மரத்துக்குச் சமமானவர்கள்.

பூவரசமரம் நிறையப் பூக்கும். ஆனால் ஒரு பூவாவது பழமாக மாறாது. எல்லாமே கொட்டி விடும். அதைப் போல் உனக்கு அதைச் செய்கிறேன் இதைச் செய்கிறேன் என அளந்து விடுவார்கள். சொல்வதில் ஒன்றைக் கூடச் செய்ய மாட்டார்கள்.

பூப்பூக்காமல் காய்த்துப் பழம் பழுக்கக் கூடிய மரம் உலகில் இரண்டே மரம் தான். ஒன்று பலாமரம்; மற்றொன்று அத்திமரம். இதில் சிறப்புக் கருதி பலாவுக்கே முதலிடம்.

அதைப் போல் நாம் கேட்காமலேயே—நமக்கு ஒன்றைச் செய்கிறேன் என்று சொல்லாமலேயே—செய்யக் கூடிய பலா மரம் போன்ற பக்குவம் உடையவர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.

இலக்கிய உலகில் கம்பன் வாழ்வதற்குக் காரணியம் சடையப்ப வள்ளல். திரைப்பட உலகில் பாடலாசிரியராக நான் வாழ்வதற்குக் காரணியம் புரட்சித் தலைவர்.

புரட்சித் தலைவரைப் பற்றி நான் எழுதிய பிள்ளைத்தமிழ், உலா, அந்தாதி ஆகிய மூன்று சிற்றிலக்கியங்களை முன்பு

வெளி வந்த 'தென்னகம்' எனும் கழக நாளேட்டில் நான் எழுதினேன். அதற்குக் கரணியமாக இருந்தவர் அப்போதைய தென்னகம் பத்திரிகையின் செய்தி ஆசிரியராக இருந்த சீனிவாச மூர்த்தி அவர்கள் அவர்களுக்கு என் நன்றி.

இதைப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்று நான் விரும்பிய போது—எழுத்துலக வேந்தன் — இலக்கிய மணம் கமழும் அரசியல் கட்டுரைகளால் இதயம் கவர் காந்தன்— நீரோட்டம் அடியார் அவர்கள் தானே வெளியிடுவதாகப் பெருமுயற்சி எடுத்து பல்வேறு சிரமத்திற் கிடையில் புத்தகமாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

கம்பர் தாம் பாடிய இராம காதைக்கு தஞ்சை அஞ்சனாட்சி என்ற பெண்பாற் புலவர் சாற்றுக்கவி கொடுத்ததாகக் கவிஞர் சுரதா அவர்கள் ஒரு நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அதைப் போல் சாற்றுக்கவி கொடுக்கா விட்டாலும் அடியார் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை அளித்துள்ளார்கள். பதிப்புரை எழுத வேண்டியவரையே அணிந்துரை அளியுங்கள் என்று நான் கேட்டது அவரது இலக்கியப் புலமை கருதியே.

வெளியீட்டு விழாவை வைத்துக் கொண்டு புத்தகத்தைக் கொண்டுவர விரைவான முயற்சி எடுத்ததால் சில இடங்களில் அச்சுப் பிழைகள் வந்து விட்டன. அன்பர்கள் பொறுத்தருளவேண்டும்.

குறுகிய நாளில் விரைவில் அச்சிட்ட நீரோட்டம் அச்சகத்திற்கும் நூலை வெளியிட்ட நீரோட்டம் பதிப்பகத்திற்கும் என் இதயங்கனிந்த நன்றி.

—தங்கள் அன்புள்ள

முத்துலிங்கம்

வணக்கச் செய்யுள்

எழுத்தின் கூட்டம் சொல்லாக
இசைச்சொல் எல்லாம் பொருளாக

வழுத்த நின்ற தமிழ்மொழிக்கு
வண்ணம் மிகுந்த வரிவடிவம்

எழுதிக் கொடுத்த முதலறிஞன்
எவனோ அவனை நாம் துதிப்போம்

உழவோர் உயர்ந்தோர் மற்றுமுள
உழைப்போர் குலத்தை நாம் பணிவோம்

காப்புப் பருவம்

தமிழ்

(எம். ஜி. ஆர் என்ற குழந்தையை தமிழ்த்தாய் காக்கட்டும்)

நீரோடு விளையாடி நெருப்போ டுறவாடி
நெஞ்சமதில் ஊஞ்சலாடி
நித்திலத்தில் கோட்டைகட்டி
நெல்மணியைக் கொட்டிவைத்த
நெடுமதுரை நகரிலாடி

நேரான செங்கோலை நிலைசெய்த பாண்டியரின்
நிகரிலா அவையி லாடி
நெடியமலை பொதியமதில் இளையமயில்
தென்றலுடன்
நித்தம்கை கொட்டி ஆடி

ஆராரோ பாடுகையில் குழந்தைகளின்
காதுகளில்
அமுதாகக் கலந்து கூடி
அன்றுமுதல் இன்றுவரை நின்றுநிலை
யாகிவரும்
அழகான விந்தைத் தமிழே!

ஊராரும் நாட்டாரும் உலகிலுள்ள நல்லாரும்
உவப்போடு போற்றவந்த
உத்தமராம் எம்.ஜி.ராமச் சந்திரனும்
. . குழந்தைதனை
ஒருகுறையும் இன்றிக் காப்பாய்

நீதி

(நீதிதேவன் காக்கட்டும்)

பழையனூர் நீலிக்குப் பரிந்துரைத்த காரணத்தால்
பகர்ந்தமொழி உறுதி காக்க

படித்தறிந்த வேளாளர் எழுபதுபேர் தீக்குளித்து
பாரிலன்று நின்னைக் காத்தார்:

பிழைசெய்த நெடுஞ்செழியன் உயிர்கொடுத்து
வரலாற்றில்
பிழையாமல் உன்னைக் காத்தான்:

பேருலகில் அவ்வாறு நீதியுனைக் காப்பாற்றி
பெருமையுடன் வைத்த தெல்லாம்

மழைபோல வழங்குங்கை மாணிக்க எம்.ஜி.ஆர்.
மதலைதனை நன்கு காத்து

மலர்மாரி பெய்வதுபோல் புகழ்மாரி தினம்
பெய்து
மணிமகுடம் அளிப்பதற்கே!

உழையாத நீதிநீ அவ்வா றளித்ததால்
ஓடிவந் தருகில் நிற்பாய்!

உத்தமராம். எம்ஜி.ராமச் சந்திரனும்
குழந்தைதனை
ஒருகுறையும் இன்றிக் காப்பாய்!

தர்மம்

(தர்மதேவதை காக்கட்டும்)

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
  முன்னாளில் இருவர் தந்தார்:

  முதிரமலைக் குமணனே தமிழுக்குத் தலைதர
  முழுமனம் ஒப்பி நின்றான்:

இல்லையென் றுரைப்போர்க் கில்லையென்
                    றுரையாமல்
  ஈந்துவந்தான் அங்கமன்னன் !

  இறப்பிலும் அந்தணர்க்குத் தர்மத்தைத்
                    தானமாய்
  இரத்தத்தால் தாரை வார்த்தான்!

அல்லலுடன் பசியாலே அலைவார்க்குச் சோறளிக்க
  அடையாத நெடுங் கதவை

  அகமுடைய திருவெண்ணெய்ச் சடையப்பன்
                    கொண்டிருந்தான்
  அதனாலே கம்பன் வாழ்ந்தான்

தொல்லுலகில் இத்தகைய வள்ளல்களால்
                    நிலைபெற்ற
  தூய்மைமிகு தர்மத்தாயே

  சுடர்மிகுந்த எம். ஜி. ஆர். தூயவெழிற்
                    குழந்தையை
  சூழவந்து காத்து நிற்பாய்!

சத்தியம்

(சத்தியம் அரணாக நின்று காக்கட்டும்)

கத்துகடல் சூழுலகில் கற்றறிந்த மானிடர்கள்
கழறுகின்ற வார்த்தை தன்னில்

கறைபடா திருப்பதும் மறைபடா திருப்பதும்
காலமெலாம் நிலைப்ப தூஉம்

சத்தியம் ஒன்றேதான் : அதனால்தான்
அரிச்சந்த்ரன்
சரிதைதனை நாமறிந்தோம்!

சத்தியமே நீதிக்கோர் அடித்தளம் என்பதைத்
தமிழ்ச்சிபி காட்டி நின்றான் :

சத்தியம்தான் அன்றைக்குப் பாண்டவர்க்கு
வெற்றிதனை
தாரணியில் அளிக்கக் கண்டோம்

சத்தியத்தை மறந்ததனால் முன்பிருந்த
அரசாட்சி
தமிழ்நாட்டில் சரியக் கண்டோம்

சத்தியத்தைக் காப்பதற்கு நித்தநித்தம் தவமிருந்து
சத்தியத்தாய் பெற்ற மைந்தன்

தங்கநிற எம். ஜி. ஆர். சிங்கமனக்
குழந்தையை
சத்தியமே காத்து நிற்க!

வீரம்

(வீரத்திருமகள் காக்கட்டும்)

மின்னற் பொறிபடும் போர்க்கள வாட்களில்
மேலெறி ஈட்டிகளில்

மேரு மலைதனில் நாட்டிய புலிக்கொடி
மீன்கொடி விற்கொடியில்

பின்னிப் பிணைந்த சரிதையில், ஒருகரப்
பெருமத யானையுடன்

பீடிரு கரமுடை மறவர் பொருவது
பிழையெனச் செயல்புரிந்த

முன்னைத் தமிழின வழியினில் ஒன்றிய
முனைப்புள திருவீரம்

முறையுடன் எம்.ஜி.ஆர் பிறைமதிக்
குழந்தையை
முகமெனக் காக்கட்டும்

கன்னக் குழிபட வண்ணக் கிளியென
கைகால் அசைத் திலங்கும்

கனியெனும் எம்.ஜி.ஆர் பனிமலர்க்
குழந்தையை
கண்ணெனக் காக்கட்டும்

புகழ்

(புகழ் 'காவல்' தெய்வமாக நின்று காக்கட்டும்)

பொன்னும் பொருளும் உடைமைகளும்
புவியில் ஒருநாள் போந்தொழியும்

புவியும் ஓர்நாள் மாய்ந்தொழியும்
புனிதன் வகுத்த நியதி இது

என்ன அழிந்தும் அழியாமல்
எதுபோ னாலும் குறையாமல்

என்றும் இருத்தல் புகழேயாம்
இதுவே நிலைத்த திருவேயாம்!

மண்ணில் நிலைத்த திருப்புகழே!
மகிமை யளிக்கும் தனிப்புகழே!

மனிதக் குலத்து மாமணியாய்
மலர்ந்து விளங்கும் எம்.ஜி.ஆர்

வண்ணக் குழந்தை தனைக்காக்க!
வருங்காலத்தில் வையத்தை

வாழ்விக்கும் ஓர் மழலையிது!
வள்ளல் இதனை நீ காக்க!

நல்லோர் உள்ளம்

(நல்லோர் உள்ளம் காக்கட்டும்)

பண்பு மிகுந்த மனிதர்களால்
பாரே நிலைத்து நிற்குதென்று

பண்டைப் புலவர் பாடிவைத்துப்
பாட்டில் நின்று வாழ்கின்றார்.

பண்பிற் சிறந்த சான்றோரின்
பரவத் தகுந்த நன்னெஞ்சம்

பச்சைக் குழந்தை எம். ஜி. ஆர்
படுத்துப் புரளும் பொன்மஞ்சம்

என்றே இலங்கும் காரணத்தால்
இயல்பிற் சிறந்த நல்லோர்கள்

இதய மெல்லாம் வாழ்த்தட்டும் ;
இந்த வாழ்த்தில் எழும்சக்தி

அன்புக் குழந்தை எம். ஜி. ஆர்
அருகில் நின்று காக்கட்டும்

அழகுப் பிழம்பாம் எம். ஜி. ஆர்
அருமைச் சேயைக் காக்கட்டும்

வள்ளுவர்

(வள்ளுவர் தெய்வமாக நின்று காக்கட்டும்)

இல்லாத எப்பொருளும் இல்லையென்று சொலும்
வண்ணம்
எல்லாமும் சொல்லி வைத்து
எல்லார்க்கும் பொதுவாக எல்லாரும் ஏற்கும்
வண்ணம்
இலங்கறிவால் அறமுரைத்து
சொல்லாரும் தமிழுக்குச் சுடராரும் வண்ணத்தில்
தொழும் வண்ணம் பெருமை தந்து
தொல்லுலகை இரண்டடியால் அளந்ததனால்
திருமாலைத்
தோற்கடித்த தெய்வப் புலவன்
நில்லாத உலகத்தில் நிற்கின்ற புகழோடு
நிகரின்றி விளங்கப் போகும்

நேர்மை மிகு எம். ஜி. ஆர். சீர்மை மிகு
குழந்தையை
நெடிது நாள் காத்து நிற்க !
பொல்லாங்கு கூறாத தென்பாங்குக் கவியென்னும்
பூத்தூவி வேண்டுகின்றேன்
போற்றிவளர் எம். ஜி. ஆர் நூற்றிலொரு
குழந்தையைப்
பொன்போலக் காக்க வென்றே

அண்ணா

(அண்ணு தெய்வமாக நின்று காக்கட்டும்)

அறிவிற் பனிவரை உருவிற் குறுமுனி
அழகின் உரைநடை அதில்தனி எழில்நடை

அமுதசுரபியாய் அருவி விழுவதாய்
அவனி விழைந்திட இதழ்களைத் திறந்தவன்.

குறியிற் றமிழ்மொழி அதனிற் றமிழினம்
குனியா தெழுந்திடப் பணிபுரிந் தெழுப்பினன்

குறையா அரசியல் விரகிற் சிறந்தவன்
குலையா மனத்தினன் திராவிட நிலத்தினர்

முறையாய்த் தொழுதிட அறிவால் உழுதவன்
முறையாய்ப் படித்தவன் காஞ்சியில்உதித்தவன்

மொழிநூல் அறிஞர்க்கும் அறிஞராய்
ஆனவன்
முடியாச் செயல்களை முடித்தவன் அன்னவன்

கறையில் லாவொரு கடவுள் நிகரவன்
காத்துப் புரந்திட கவிதையில் வேண்டுவன்

கனக மணியெனும் இதயக் கனியெனும்
கலையின் பிறப்பிடம் எம்.ஜி.ஆர்க். காகவே!

இயற்கை

(இயற்கை காக்காட்டும்)

சிவமெனும் தத்துவத்தை உயிரென்று வேதாந்தம்
 செப்பியே வைத்த தாலே
 'சிவ' மது இயற்கையெனத் தெளிவான
 தால்அது
 தினந்தோறும் காக்க வேண்டும்.

சிவத்திற்கு இடக்கண்ணும் வலக்கண்ணும்
 சந்திரனும்
 செங்கதிரும் என்பதாலே
 திகழுமிவை யும்இயற்கை அதனாலே நம்மகவை
 தினமுமிவை காக்க வேண்டும்

சுவையுடைய செந்தமிழில் பாவியென்றால் (சாது)
 என்று
 சொலற்கரிய பொருளுண் டெனச்
 சுடரறிவை வெளிக்காட்டிக் கலைஞரது
 தமிழ்ச்செருக்கை
 தோற்கடித்துப் புலவர் போற்ற

நவயுகத்தை நிர்மாணம் செய்யவந்த திருத்
 தோன்றல்
 நம்குழந்தை எம். ஜி. ஆரை
 நாள்தோறும் இயற்கையென்று நவில்கின்ற
 சக்தியெல்லாம்
 நலமோடு காக்க வேண்டும்!

செங்கீரைப் பருவம்

சிந்தனேயே நிறைந்தவராய் நிந்தனேயே
துறந்தவராய்
திகழ்ந்தபே றிரஞர்அண்ணு

சிங்கார த் தமிழ்நாட்டில் செங்கோலே
ஏந்துதற்கு
திருமுகத் தரிசனத்தை

தந்தமுக விலாசனே! பெண்கள்மன வாசனே
சங்குபோல் குணநே சனே

ஜனக்கடற் பள்ளியில் சயனிக்கும் திருமாலே
தனக்குவமை இலாதவனே

சந்தனம்போல் மேனியும் தனிஇரும்பாய்
உடற்கட்டும்
தந்துதந்து சிவந்த கையும்

தான்கொண்டு தமிழ்நாட்டில் வான்கொண்ட
புகழோடு
தாவிவிளே யாடு கின்ற

சிந்தைகவர் எம்.ஜி.ஆர். செல்வக் குழந்தையே
செங்கீரை யாடி யருளே

சிரஞ்சீவி யாய்விளங்கும் கொங்குவேள்
தோன்றலே
செங்கீரை யாடி யருளே

காளிங்கன் எனும் பாம்பின் செருக்கடக்கி அதன் தலையில்
கார்வண்ணன் நடம்புரிந்தான்
காசினியில் அதுபோல தி. மு. க. எனும் பாம்பை
கர்வபங்கம் செய்த கண்ணு

வாளிக்கை ஜெயத்திரதன் கருணு நிதியெனிலோ
வரிசிலைக்கை விசயன் நீதான்
வணங்காத சராசந்தன் போன்றபெரும் பகைளுருக்கும்
வன்றடக்கை வீமன் நீதான்

வாளரவக் கொடியோனின் சூழ்ச்சிகளை முறியடித்த
வளர்வடிவக் கண்ணனைப் போல்
வந்த பெரும் சூழ்ச்சிகளைத் தந்திரமாய் முறியடித்து
வளர்ந்திருக்கும் மாயக் கண்ணு

தேளான உட்பகையை அடையாளம் காண்பவனே
செங்கீரை யாடி யருளே
தீரம் மிகுந்தபிள்ளை எம். ஜி. ஆர் எனும்பிள்ளை
செங்கீரை யாடியருளே

சார்ந்தார்க்குச் சந்தனமாய் சாராத அனைவருக்கும்
தழலாயும் விளங்கு கின்ற

தனிக்கருணை மாமுகிலே ஊழலில்லா
ஆட்சியினைத்
தாபித்து வைத்த கோவே

சீர்வாய்ந்த பிள்ளையினுல் எலும்புபெண்ணுனகதை
திருமயிலை நகரி லுண்டு

சீர்நலிந்த ஆட்சினுல் சீர்குலைந்த தமிழ்நாடு
சீர்பெறுதல் உன்னு லுண்டு

பேர்வாய்ந்த இமயம்போல் உயர்ந்தபுகழ்
பெற்றவனே
பேசற்கரிய பிள்ளாய்

பெம்மானே எங்களது பூமானே தமிழ்நாட்டார்
பிள்ளையென வளரும் கண்ணே

தேர்ந்தமதி கொண்டவனே ஆய்ந்தவழி
நின்றவனே
செங்கீரை யாடி யருளே

செக்கச் சிவந்தபிள்ளைஎம்.ஜி.ஆர் எனும்பிள்ளை
செங்கீரை யாடியருளே

அலைபோல வரும் எதிர்ப்பை கரைமோதி ஓடுகின்ற
அலைபோல ஓடவைத்து

அறிவாலும் திறத்தாலும் மக்கள்மனம் தனைவிட்
டகலாத இடத்தைப் பெற்று

நிலையாக நிற்கின்ற எம்.ஜி.ஆர். என்கின்ற
நிகரிலா மேரு மலையே

நீலவான் மீனினத்தில் மதிபோல மக்களிடை
நிலவுகின்ற தங்க நிலவே

கலையாத கலைமுகிலே கண்டமைந் தும்வியக்கும்
கலையுலக ராஜ ராஜா!

கடலாழம் கண்டாலும் உன்செல்வாக்காழத்தை
காண்பதற் கியலுங் கொல்லோ?

சிலைபோல மின்னும்மக்கள் திலகமே! எம்.ஜி.ஆர்.
செங்கீரை யாடி யருளே

தேசமெங்கும் காணாத வாசமுள்ள பொன்
மலரே

செங்கீரை யாடி யருளே

(வேறு)

தென்மலைத் தென்றலும் தீங்குயில் கூட்டமும்
தீந்தமிழ் இசை பாட

சிந்தனைப் பாவலர் போல்மலர்ச் சோலைகள்
தேனினைப் பொழிந்தாட

வண்ண மலர்க்கர மும்தலை முடியும்
வனப்புடன் அசைந்தாட

வரையிலா நின்புகழ் வானத்தை முட்டியே
வளைந்து வளைந்தாட

கண்ணிமை இரண்டும் பட பட வென்று
கவினுறச் சேர்ந்தாட

காற்றினில் உன்திரு மேனியின் நறுமணம்
கலந்து பரந்தாட

அன்புற வாடிடும் பண்புள எம். ஜி. ஆர்.
ஆடுக செங்கீரை

அப்பொழு தலர்ந்தசெந் தாமரை முகமசைத்
தாடுக செங்கீரை

ஆவணித் திங்களின் மழையெனக் குறிப்பறிந்
தள்ளிக் கொடுப்பாய் நீ

அடியவர் துயரற கொடியவர் துயருற
அவனியில் பிறந்தாய் நீ

பூவணி மாதரின் குங்கும ஒளியெனப்
பொலிவுடன் திகழ்வாய் நீ

புன்னகை ஒன்றினில் பலப்பல வகைப்பொருண்
புதைந்திடச் செய்வாய் நீ

பாவலர் நாவலர் ஆவலாய்ப் போற்றிடும்
பார்த்திபன் போன்ருய் நீ

பாரத பூமியின் சீரினைக் காத்திடும்
பாங்குமி குந்தோய் நீ

ஆவென அருட்பால் சுரந்திடும் எம். ஜி. ஆர்.
ஆடுக செங்கீரை

ஆட்சியி லேபல மாட்சிகள் தந்தவன்
ஆடுக செங்கீரை

கனல்படு வனமதை புனல்படு பொழிலென
கண்ணொளி தனில்மாற்றி

கருகிடும் மரமதை கனிதரும் மரமென
கைகளில் தொட்டாக்கி

இனம்மொழி மணம் பெற திணந்தினம் திருப்பணி
ஏந்திவி ழைந்தாக்கி

இழிமிகு மதுவினை ஒழிப்பதில் பழிவரின்
ஏற்றிடும் நெஞ்சோடு

முனம்ஒரு மனிதரும் இயற்றமு னைந்திடா
சட்டமும் உண்டாக்கி

முறையுடன் குடிகளின் குறைகளைத்தீர்ப்பவன்
மூதறிஞர் கூறும்

அனல் மொழி தவிர்ப்பவன்குளிர்மொழிஉரைப்பவன்
ஆடுக செங்கீரை

ஆட்தியி லேபல மாட்சிகள் தந்வன்
ஆடுக செங்கீரை

அவுண ரெனத்தகும் கடம்ப ரினத்தினை
அழித்தோர் தமைப்போலே

அருந்திறல் பொருந்திய பெருந்திறல்
உடையவென்
அருமைச் சிறுபாலா

தவழுமி ளங்கதிர் ஒளியில்சி றந்திடும்
சந்திர னுடன்பூமி ;

தரணியில் நினதருள் பரவிய ஒளியினில்
உயர்ந்தோர் பலகோடி

புவனம் வணங்கிடும் புனிதம் விளங்கிடும்
புதுமைத் தமிழ்போலே

பொலிவுடன் தவழ்ந்திடும் வலிவுடன்
திகழ்ந்திடும்
பொன்னுர் மணிமார்பா

சிவந்தநி றந்தினை! மலர்ந்தமு கத்தினை!
செங்கோ செங்கீரை

திருமகள் தமிழ்மகன் எனும்மகன் எம்.ஜி.ஆர்.
செங்கோ செங்கீரை

தாருக மாவன முனிவர்கள் ஏவிய
சர்ப்பம் தனையடக்கி

சரமெனக் கழுத்தினில் அணிகலன் ஆக்கிய
நுதற்கண் சிவன் போலே

சீருலா இலா வெறு தமிழர் பகையெனும்
பாம்பின் திமிரடக்கி

திரைப்பட வெற்றிக் கொடித்தளம் ஆக்கிய
சின்னஞ் சிறுபூவே

ஊருளே ஒரு சிலர் உண்மையில் லாமலே
உரைக்கும் பழிப் பேயை

ஒளிவிளக் கறிந்து மறைந்திடும் இருள்போல்
ஓடச் செய்தாய் நீ

சீருள பொன்மனச் செம்மலே செல்வனே
செங்கோ செங்கீரை

சிறப்புள 'பாரத்' விருதினைப் பெற்றவா
செங்கோ செங்கீரை

காமர் மிகுந்தவுன் பேரொளி வடிவினைக்
    கண்டார் செல்வாரா

    கலைநயப் பொலிவுள நினதெழில் திருமுகம்
    கண்ணில் ஆடாதா

காமன் கர்சனை நெரித்து மடித்திரு
    மரத்தைச் சாய்த்தோன்போல்

    மதமிகு மனத்தை உடையவர் ஆணவம்
    மடித்த பூபாலா

பூமென் மனமும் பொன்னின் உடலமும்
    பூத்து நிற்பாய் நீ

    பொதுநலம் விரும்பியே சுயநலம் துறந்தவென்
    பொற்புக் கோமானே

சேமம் விளங்கிடும் சத்தியா மைந்தனே
    செங்கோ செங்கீரை

    திருவளர் எம்.ஜி.ஆர். செல்வக்குழந்தையே
    செங்கோ செங்கீரை


தாலப் பருவம்

மலர்ந்த மலர்கள் மத்தியிலே
மல்லி கைபோல் மணப் பவனே

மணிகள் ஒன்பான் வகைகளிலே
மாணிக் கம்போல் சிறப்பவனே

புலர்ந்த காலைப் பொழுதினிலே
பூபா ளம்போல் இனியவனே

புனித மிகுந்த கோயில்களில்
புண்ய இறைவன் போன்றவனே

நலமே அருளும் கண்ணியனே
நவிலும் தீமைக் கந்நியனே

நாடார் தம்மைப் பணியவைக்கும்
நயங்கள் அறிந்த வித்தகனே

குலமே சிறந்த எம். ஜி. ஆர்.
கொள்கைக் கொழுந்தே தாலேலோ

குணத்தின் குன்றும் எம். ஜி. ஆர்.
கோமான் தாலோ தாலேலோ

அண்ணன் உரைத்த கொள்கைகளை
ஆழக் குழியில் புதைத்துவிட்டு

ஆட்சி புரிந்த ஓர்முதல்வர்
அரசில் நடந்த ஊழலெல்லாம்

மண்ணும் விண்ணும் திசை யனைத்தும்
வளைந்த இருள்போல் பரவிநிற்க

மக்கள் உள்ளம் மிக நொந்து
மார்க்கம் தேடி அலைகையிலே

வண்ண மருத நிலம்செழிக்க
வழங்கும் மேக மழைபோல

வந்து பிறந்த எம். ஜி. ஆர்
வள்ளல் தாலோ தாலேலோ

தெண்ணீர்க் கயத்துத் தாமரைபோல்
சிவந்த குழந்தாய் தாலேலோ

தென்னன் தமிழ்போல் இனிக்கின்ற
சேயே தாலோ தாலேலோ

ஏழை எடுத்த தனம்போலே
எமக்குக் கிடைத்த புதையல்நீ

இயம்ப வொண்ணா ஆசைகளை
எமது மனத்தில் வளர்த்தாய்நீ

வாழை இனம்போல் தமிழ்மன்னர்
வழியில் உதித்த மன்னவன்நீ

வனத்துச் சீயத் குருளையைப்போல்
வளரும் சிங்கக் குட்டியும்நீ

கோழை என்ற சொல்லுக்கு
குறிக்கும் எதிர்ப்புச் சொல்லுடையாய்

கூர்ந்த அறிஞர் குழாத்திடையே
கூடிக் களிக்கும் சிறுமதலாய்

தாழை மணம்போல் புகழ்மணக்கும்
தனயன் தாலோ தாலேலோ

தமிழன் அழகன் எம்.ஜி.ஆர்.
தாலோ தாலோ தாலேலோ

பொய்யே மிகுந்த அரசியலில்
பொதுமைத் தேர்தல் வருங்காலை

போடும் வாக்குச் சீட்டினுக்காய்
புன்மைத் தொழில்செய் தலைவர்களை

வையம் தன்னில் கண்டோமால்
வளரும் புதுமைச் சமுதாயம்

வன்பாம் பின்வாய்த் தேரையைப்போல்
வஞ்சக் கையில் விழாதிருக்க

ஐயா நீயும் அவதரித்தாய்
அதனை மக்கள் உணர்ந்தாரால்

அகமும் முகமும் மலர்கின்றார்:
அன்பும் அருளும் உயிர்வாழும்

மெய்யாய் விளங்கும் எம்.ஜி.ஆர்
மேன்மைக் குமரா தாலேலோ

மெல்லத் தவழ்ந்து முகமசைக்கும்
மின்னே தாலோ தாலேலோ

அமுதத் திருவாய் மிழற்றுகின்ற
அழகிற் குழைத்த மொழியாவும்

அயர்வு போக்கும் மருந்தாய் உன்
அன்பர்க் கிருக்கக் கண்டுகொண்டோம்

குமுதப் பூக்கள் மலர வரும்
குளிர்ந்த நிலவே! சுகமளிக்கும்

கோடை காலத் தென்றலைப்போல்
குற்றா லத்தின் அருவியைப் போல்

சமுகம் மகிழ வளர்பவனே
சாகும் போதும் கொடையளித்த

தண்ணார் சீதக் காதி யைப்போல்
தற்கா லத்தில் விளங்குகின்ற

தமிழின் மணமாம் எம். ஜி. ஆர்.
தாலோ தாலோ தாலேலோ

தடையை உடைக்கும் படையுடைய
தலைவன் தாலோ தாலேலோ

காதற் பெண்டிர் கொழு நருடன்
கண்ணால் கேலி பேசுதல் போல்

கனத்த இருளில் விண்மீன்கள்
கண்ணைச் சிமிட்டும் காரணமேன்?

போத விழ்ந்து சிரிக்கின்ற
பூவே உன்றன் எழில் கண்டு

புரியும் காதல் அடையாயப்
பொற்பென் றறிவாய் என்கண்ணே

வேதம் படிக்கும் விற்பனரும்
விவரம் புரியாப் பாமரரும்

விளங்கும் பன்னூல் அறிஞர்களும்
விரும்பும் மதலாய் எம்.ஜி.ஆர்

மாதர் மயங்கும் அழகரசே
மகிபா தாலோ தாலேலோ

மாசில் லாத குணமுடைய
மணியே தாலோ தாலேலோ

நீதி தன்னை நிலை நாட்ட
நிலைத்த உண்மை வெளிக்காட்ட

நியாயம் தவறி நடப்பவரின்
நெஞ்சைத் திருத்தி வழிகாட்ட

சாதிச் சண்டை தனையோட்ட
தமிழ னென்ற உயிரோட்டம்

தன்னைக் காட்டப் பிறந்துவந்து
தளிர்க்கை யாட்டும் இளமதலாய்

மேதிக் குலங்கள் நெல்வயலில்
மேயும் கதைபோல் நாடாண்ட

மேன்மை யற்றோர் செயலாலே
மிகுந்த துயரம் தனைத் தீர்க்க

சோதி விளக்காய் நீவந்தாய்
சுடரே தாலோ தாலேலோ

தூங்காப் புகழோய் எம். ஜி. ஆர்.
துணிவின் வடிவே தாலேலோ

ஏசு பிரானைச் சிலுவையிலே
இரக்கம் ஒழித்தோர் அறைந்ததைப்போல்

ஏசும் மொழியார் உனைச் சிலுவை
இழிவாய் மொழியில் அறைகின்றார்

பேசும் அன்பு 'வழியுரைந்த
பெம்மான் நபிமேல் கல்லெடுத்து

பேரிச் சமர மணல்நாட்டார்
பேதைத் தனத்தால் எறிந்ததைப்போல்

கூசும் படியாய்ப் பொய்ப்பழியாம்
குன்றக் கல்லை எடுத்தெறியும்

குரங்குக் கேடர் தவறுகளை
குணத்தால் பொறுத்துக் கொண்டிருக்கும்

தேசு விளங்கும் எம்.ஜி.ஆர்
சிம்மம் தாலோ தாலேலோ

ஜெயமே கொண்டு பயமறியாச்
செல்வம் தாலோ தாலேலோ

(வேறு)

சென்னை நகர்க்குறு குடிநீர்ச் சிக்கலைத்
தீர்க்க மனம்வைத்து

சிறப்புற் றிலங்கிடும் கிருஷ்ணா நதிநீர்த்
திட்டம் உருவாக்கி

பொன்றும் வழியினில் ஆந்திர அரசுடன்
புதிய ஒப்பந்தம்

போற்றிடும் வழியினில் ஆக்கிய முதல்வனும்
புவியில் நீதானே

கொன்றைச் சரமென குங்குமச் சிமிழென
குருத்து மடலாக

குத்துவி ளக்கெனக் கொற்கையின் முத்தெனக்
குளிர்பூந் தொட்டிலிலே

மன்றல் கமழ்ந்திட விழிவள ரும்தமிழ்
மகனே தாலேலோ

மந்திர தந்திர விந்தை தெரிந்த என்
மைந்தா தாலேலோ

நிலமகள் விசும்பினை நோக்கி இயற்கையாய்
நித்தம் கிடப்பது போல்

நீணிலத் திற்புகழ்த் தமிழகம் நின்முகம்
நோக்கிக் கிடக்கிறது

குலமகள் பாரத அன்னையின் விடுதலை
கூடி வரும்நாளை

குவலயம் தனிலொரு சுதந்திர மறப்படை
குறித்துக் கிடந்தது போல்

நலமருள் நின்னுடை ஆட்சியை நாட்டினில்
நாட்ட எதிர்பார்த்து

நாளொரு பொழுதுமுன் நினைவுடன் வாழ்வினில்
நாட்டி முடித்தோம் யாம்

புலமது சிறந்தவன் எம். ஜி. ஆர். என்ற என்
பூமான் தாலேலோ

புதுமைகள் செய்திடும் அருமைகள் நிறைந்த என்

பொன்னே தாலேலோ

சப்பாணிப் பருவம்



கற்புத்தான் பொண்ணினத்தின் அணிகலன்கள்
என்றுரைத்தால்
கன்னியர்கள் கோபிப் பாரா
கவிதைக்குப் பொருளழகும் அணியழகும்
வேண்டுமெனில்
கவிப்புலவர் கோபிப் பாரா

வெற்புத்தான் முகில்தடுத்து மழைவளத்தைக்
கொடுக்குமெனில்
விவரமுள்ளோர் தவறென் பாரா
விளங்குமொரு கட்சி பெற்ற பணக்கணக்கை
அதன் செலவை
விவரமாய்ச் சொல்க என்ருல்

நற்புத்தி மிகுந்தவர்கள் சினப்பாரா ? சினந்தாரேல்
நல்லவர்கள் ஒப்பு வாரா
நாட்டினிலே அத்தகையோர் நாணயத்தைத்
தோலுரித்து
நானிலத்திற் கெடுத்து ரைத்த

சற்குருவாய் விளங்குகின்ற அற்புதமே எம். ஜி. ஆர்
சப்பாணி கொட்டி யருளே
தமிழுலகம் செய்தவத்தால் தாரணியில்
உதித்தவன்
சாப்பாணி கொட்டியருளே

இரும்பாலை பலவிருந்தால் அந்நாட்டின் தொழில்
வளத்தை
எல்லார்க்கும் எடுத்துக் காட்டும்
இறவாத நீர்வளத்தை நெல்விளையும் வயற்
பெருக்கம்
எப்போதும் விளக்கிக் காட்டும்

அரும்பாகி மலராகும் நறுமணத்துப் பூவளத்தை
அளிவண்டின் கூட்டம் காட்டும்
ஆற்றல் மிகு இயக்கத்தின் போற்றல்மிகு
வலிமைதனை
அருந்தொண்டர்ப் பெருக்கங் காட்டும்

கரும்பான சொற்பொழிவால்புகழார்ந்தஅண்ணாவின்
கருத்தையெலாம் கொள்கையாக்கி
கட்சி யொன்றை உருவாக்கி அதன் வலிவைத்
தொண்டர்களால்
கடல் போலப் பெருக்கிக் காட்டும்

தருமமிகு எம். ஜி. ஆர். அருமைமிகு குழந்தையே
சப்பாணி கொட்டி யருளே
தடுமாற்றம் அடையாத மனத்தோற்றம்
உடையவன்
சப்பாணி கொட்டி யருளே

தோய் தீர்க்கும் வேப்பிலைபோல் வறுமையெனும்
பிணி நீக்கும்
நுண் மருந்தே ! மயக்கப் பித்த

நோக்காட்டைத் தீர்க்கின்ற எலுமிச்சை
போல் பதவி
நோய் தீர்க்கும் ஞானக் கொழுந்தே

வாய்பாடும் பாடலுக்கு வார்த்தைகளே எங்களது
வாழ்வுக்கு ஜோதி நீயே

வற்ருத அன்பூறும் ஆனந்தப் பூங்கிணறே
வரையில்லாக் கொடை வள்ளலே

தேய்மானம் இல்லாத முழுநிலவே தேய்ந்தாலும்
சந்தனம்போல் தேயும் வடிவே

சிந்தையணு ஒவ்வொன்றும் சிலிரவைக்கும்
இன்னுணர்வே
தென்பொதிகை இளந்தென்றலே

தாய் போலக் காக்கின்ற செல்வமே எம்.ஜி.ஆர்.
சப்பாணி கொட்டி யருளே

தமிழ் போல மணக்கின்ற புகழ்மணத்தைக்
கொண்டவன்
சப்பாணி கொட்டியருளே

திசைதவறிப் போகாமல் கப்பலுக்கு வழிகாட்ட
திகழ்கின்ற விளக்கம் போல

தென்னாட்டு மக்களினம் திசைமாறிப்போகாமல்
செய்கின்ற விளக்கம் நீயே

இசைதவறிப் போய்விட்டால் பாடகர்க்குச்
சிறப்பில்லை
எண்ணெயின்றித் தீபம் இல்லை

இசைபோல எண்ணெய்போல் இருப்பவனே
நீயின்றி
இந்நாட்டுக் குய்வே இல்லை

வசைபாடி வாழ்பவர்கள் வாழட்டும்: தமிழாலே
வைவார்க்கும் வாழ்த்துக் கூறி

வருங்கால உலகத்தைக் காலடியில்
விழவைக்கும்
வல்லவனே எங்கள் மேனித்

தசையாக நரம்பாக உயிரோடு கலந்தவனே
சப்பாணி கொட்டி யருளே

தளிர்போன்ற இருகரங்கள் அழகாக நீசேர்த்து
சப்பாணி கொட்டி யருளே

அறியாமல் பிழைசெய்வோர் ஆராக இருந்தாலும்
அதைப்பொறுக்கும் இனிய பண்பும்
அன்னவரை மென்மேலும் ஆதரிக்கும்
உயர்குணமும்
அடைந்தவர்யார் நின்னை யன்றி!

குறைவடிவ அகத்தியனுல் தென்திசைசீர்
பெற்றதென
கூறுதொரு புராணம் இங்கே
குறையுடைய தமிழ்நாட்டை நிறைசெய்வாய்
நீயென்றே
குவலயத்தில் நம்பியுள்ளோம்

கரையின்றி அலைமோதும் கடல்வாழும் சிப்பியிலே
கவின் முத்துப் பிறந்ததைப்போல்
காண்கின்றகண்களெலாம் களிக்கின்ற
அழகோடு
கனிபோலப் பிறந்த மதலாய்

தரைமெச்சும் புலவரெலாம் உனைமெச்ச
வேண்டுமென்று
சப்பாணி கொட்டி யருளே
தனக்குநிகர் தானென்னும் தகுதிபெற்ற
எம். ஜி. ஆர்.
சப்பாணி கொட்டி யருளே

அன் ெறாருநாள் முதலையொன் றியானையினைப்
பற்றுகையில்
ஆதிமூலா என்ற ழைக்க
'அரி'க் கடவுள் ஓடிவந் தருள்தந்து
காத்ததுவாய்
அந்தநாட் புராணம் சொல்லும்

இன்றதுபோல் தமிழ்நா டெனும்வேழம்
ஒரு சிலரின்
இரக்கமிலாப் பிடியிற் பட்டு
இறவாமல் இறக்கின்ற தருணத்தில்
இதைக் காக்க
இங்குவந் துதித்தனை நீ

தென்னிலங்கைத் தீவிலே இதுவரையில் காணாத
சீறிவந்த புயலி னாலே
சீரிழந்த மக்கட்கும் செயலிழந்த
எளியோர்க்கும்
செந்தமிழ் அரசின் சார்பில்

தன்மையுடன் பத்திலக்க மதிப்புடைய
பொருளளித்தோய்
சப்பாணி கொட்டி யருளே
தஞ்சமென்று வந்தவரைத் தாய்போல
ஆதரிப்போய்
சப்பாணி கொட்டி யருளே

இதிகாசம் மூன்றனுள் சிவரக சியம்மட்டும்
இன்னும்அச் சேற வில்லை

இருந்தாலும் சாமிநாத ஐயரின்றேல் ஐம்பெரும்
இலக்கியம் கிடைத்தற் கில்லை

விதியான கடல்கோளால் முன்னிரண்டு சங்கத்தின்
விளங்குநூற் றெருகுதி யில்லை

வெகுபுலவர் கடந்தநூற் ருண்டிலே
வரைந்ததெலாம்
நூல்வடிவில் வரவு மில்லை

அதையெலாம் தேடியே ஆராய்ந்து பதிப்பிக்க
ஆணையிடப் பிறந்த பிள்ளாய்

அறங்காவற் றுறையிலே தமிழ்கற்ருேர்க்
கிடமுளதாய்
அறிவிப்புச் செய்த பிள்ளாய்

சதிகாரர் சூழ்ச்சியைத் தவிடுபொடி யாக்குவோய்
சப்பாணி கொட்டி யருளே

தனக்குநிகர் தானென்னும் தகுதிபெற்ற
எம். ஜி. ஆர்.
சப்பாணி கொட்டி யருளே

அறிவுக்குச் சிகரமாம் தமிழுக்கோர் அகரமாம்
அண்ணாவின் பிறந்த நாளே

அஞ்சாத சிங்கமாம் பசும்பொன்னின் தேவரவர்
அவதாரம் செய்த நாளே

எறிகுண்டு வார்த்தைகளால் மூடமலை
தனைத்தகர்த்த
ஈரோட்டார் பிறந்த நாளே

இந்தியத்தின் பிரதமரைத் தேர்ந்தெடுத்த
காமராஜ்
எனும்தலைவர் உதித்த நாளே

வெறிச்செயலைத் தூண்டாத ராஜாஜி போன்றபல
வித்தகர்கள் பிறந்த நாளே

வெல்லத்தமிழ் அரசாங்கச் செல்லத்திரு
நாளாக்கி
விழாவினை எடுத்த மைந்தன்

தறியாளர் தொழிலாளர் வாழ்வோங்கப் பிறந்தவன்
சப்பாணி கொட்டி யருளே

தனக்குநிகர் தானென்னும் தகுதிபெற்ற
எம். ஜி. ஆர்.
சப்பாணி கொட்டி யருளே

கத்து கடலலை முத்தம் இழைத்திடும்
கவினுறு புதுச்சேரி

கவிதைக் குயில்களின் பிறந்த தினத்தினை
அரசுக் குரித்தாக்கி

சித்தம் மயக்கிடும் வித்தை இசைக்கலை
சிறப்புடன் வளர்ந்தோங்க

சிந்தை மகிழ்ந்திட முந்தி உதவிகள்
செய்துக ளித்தாய்நீ

கத்தி யெனத்தகும் புத்தியு டன்புவி
காத்துப்பு ரப்பாய்நீ

கங்குல் விளக்கெனத் திங்கள் தனைச்சொலின்
எங்கள்வி ளக்கேநீ

கொத்து மலர்ச்சரத் தத்தைக் கொருமகன்
கொட்டுக சப்பாணி

கொற்றக் குடைமகன் வெற்றித் திருமகன்
கொட்டுக சப்பாணி

மண்ணின் புடைப்பென விம்மி எழுந்துள
மலைபடு மணிகளிலே

வண்ண மரகதம் உன்றன் பசுமனம்
வைரமுன் தோளாகும்

திண்மை மிகுந்துள நீலக் கருமணி
சிறுவிழிக் கிணையானால்

செக்கர் நிறமுள ரத்னம் எனும்மணி
திருவுடல் எழிலாகும்

அண்ணல் முடியடி தன்னை அறிவதில்
அயனுடன் மால்தோற்றார்

அண்ணல் நின்சிறப் பெல்லை அறிந்திட
முனைந்தவர் பலர்தோற்றார்

கொண்டல் மனத்தவன் தென்றல் இசையெனக்
கொட்டுக சப்பாணி

கொற்றக் குடைமகன் வெற்றித் திருமகன்
கொட்டுக சப்பாணி


முத்தப்பருவம்

காயின்றிக் கனியில்லை! கனிகொடுக்கும்
விதையில்லை;
காட்சிதரும் மரமு மில்லை.

கடலின்றி முகிலில்லை! முகிலின்றி மழையில்லை;
கழனியிலே விளைவு மில்லை.

வாயின்றி வாழ்த்தில்லை தாயின்றிச் சேயில்லை!
வனப்பின்றிக் கவர்ச்சி இல்லை!

வையத்தார் உள்ளத்தின் மையத்தில்
வீற்றிருக்கும்
வழங்கு கொடை எம். ஜி. ஆரே

நீயின்றி அலைஓசை எனும்இதழ் அப்போது
நிலைத்திருக்க வழியே இல்லை!

நீணிலத்தில் இதைமறந்து பின்னாளில்
உணர்ந்தோர்க்கு
நீதந்தாய் சரண எல்லை.

ஓய்வொழிச்சல் இல்லாமல் நாட்டுக்குப் பாடுபடும்
ஓர்குழந்தை முத்தம் அருளே!

உதயமதில் எழும்கதிராய் ஒளிவீசும்
எம். ஜி. ஆர்.
ஓர்முத்தம் சிந்தி யருளே!

வளையாமல் நிமிர்கின்ற வரையில்லாப்
புகழுடையோர்
வையத்தில் பலபேர் உண்டு.
வானத்தைப் போய்முட்டி அதற்கப்பால்
இடமின்றி
வளைகின்ற புதுமை மிக்க

களைப்படையாப் புகழுக்குச் சொந்தமுள்ள
மனிதரென
காசினியில் நீயே உண்டு!
காலத்தின் கட்டளையை நிறைவேற்றப்
பிறந்தவனே!
கட்டுப்பா டுடைய கோவே!

விளையாட்டாய் அரசியலில் உனைவெல்ல
நரிமனத்தார்
விவரமின்றிச் சேரு கின்றார்:
வீழ்ந்துவிட்ட மரங்களெல்லாம் நிற்குமொரு
பெருமரத்தை
வீழ்த்திவிட நினைப்ப துண்டோ?

கிளைகள்பல லட்சத்தில் கிளைவிட்ட கட்சிக்குக்
கிளர் தலைவன் முத்தம் அருளே!
கீழ்ப்பட்ட தென்னாட்டை மேற்படுத்தும்
எம். ஜி. ஆர்.
கிளி முத்தம் சிந்தியருளே!

பாவலர்கள் குறிப்பறிந்து பண உதவி செய்து
வரும்
பார்த்திபனே! தெய்வம் தன்னைப்
பார்த்ததில்லை நேரிலே: பாட்டெழுதும்
கவிஞன் நான்
பார்க்கின்றேன் உன்றன் வடிவில்!

காவல்செய வருபவர்கள் களவுசெய்ய முடியாமல்
கட்டளைகள் பிறப்பித் தனை:
கண்டிப்பும் தண்டிப்பும் கச்சிதமாய்ச்
செய்பவனே
கண்ணியத்தின் காவ லாள!

ஆவலுடன் குழந்தையொன்று தாவிவந்து
தாய்மடிமேல்
அமர்கின்ற அழகு போல
அரியதமிழ் நாட்டவர்கள் உன்மடிமேல்
அமர்கின்றார்
அதுவன்றோ உண்மைப் பாசம்!

கேவலமாய் ஆகிவிட்ட அரசியலைச் சீர்செய்த
கேள்வன்நீ முத்தம் அருளே!
கீழ்ப்பட்ட தென்னாட்டை மேற்படுத்தும்
எம். ஜி. ஆர்.
கிளிமுத்தம் சிந்தி யருளே!

ஊமையையும் பேசவைப்பாய் குருடரையும்
பார்க்கவைப்பாய்
ஒருகால் இழந்து வருந்தும்
ஒருநூறு முடவரையும் உன்னருளால் நடக்க
வைப்பாய்
உத்தமனே நீ நினைத்தால்

ஆமையையும் முயலாக்கும் ஆற்றலுனக்
குள்ளதென
அகிலமெலாம் அறியக் கண்டோம்:
அன்றொருநாள் மேலவையில் முதன்முதலில்
நீபுகவும்
அவைத்தலைவர் எழுந்து நின்று

தாமுனையே வணங்கியதாய் சரித்திரமும்
நினக்குளது:
தகுதியிஃதியார்க்கு முண்டோ?
தகுதிக்கும் திறமைக்கும் தமிழ்கூறும்
பண்பிற்கும்
தக்கதொரு இடங் கொடுக்கும்

கோமகனே செந்தமிழர் குலமகனே! எம். ஜி. ஆர்.
குளிர்முத்தம் சிந்தி யருளே!
குன்றாத புகழோடு நின்றாடும் கலைமுகிலே
குளிர்முத்தம் சிந்தி யருளே!

[வேறு]

மலர்வாய் திறந்து சிரிப்பவனே!
மணியும் பொன்னும் உதிர்ப்பவனே

மலைகள் அசைந்தே நகர்ந்தாலும்
மனமே அசையா மாமகனே!

உலவும் தென்றல் காற்றுடனே
உலவப் பிறந்த தமிழ்போல

உள்ளம் நிறைந்தே இனிப்பவனே!
உயர்ந்த குணத்தால் சிறப்பவனே!

புலமே சிறந்த அண்ணாவின்
புனிதக் கொள்கை தனைக்காக்கப்

புரட்சித் தலைவர் என விளங்கும்
புண்யம் மிகுந்த அருளரசே!

நிலமே வியக்கும் எம். ஜி. ஆர்.
நின்வாய் முத்தம் தருகவே!

நேர்மை விளங்க வளர்பவனே
நீயோர் முத்தம் தருகவே!

வாழ்க்கை யென்னும் பாலைவன
வழியைக் கடக்க முடியாமல்

வாடித் தவிக்கும் எளியவர்க்கு
வாய்த்த ஊற்றாய்ச் சுரப்பவனே!

தாழ்வை அகற்ற வந்தவனே!
தரணி வாழும் தலைவர்களில்

தகுதி மிக்க தலைவனென
தனித்து வத்தால் சிறந்தவனே!

ஏழ்மைப் பட்ட மக்களுக்கு
ஏற்றம் கொடுக்கப் பிறந்தவனே

எதிலும் வருமுன் காக்கின்ற
இலங்கும் நுட்ப மதியுடையோய்

சூழ்ந்த தொண்டர் தமைமதிக்கும்
தூயோய் முத்தம் தருகவே!

துணிவின் வடிவாம் எம். ஜி. ஆர்.
சுடர்வாய் முத்தம் தருகவே!

சொல்லிப் பார்த்தால் வாய்மணக்கும்
தொட்டுப் பார்த்தால் கைமணக்கும்

தூய நெஞ்சால் உனை நினைத்தால்
சுற்றுப் புறமும் தானினிக்கும்!

செல்லக் குழந்தாய் உன்போல
சிறந்த பிள்ளை இதுவரைக்கும்

தென்னாட் டகத்தில் உதித்ததில்லை
சிலநாட் போனால் உதிப்பரென்று

சொல்லிக் கொளவும் வழியில்லை
சூர்யன் போலே ஓர் சூர்யன்

சுடர்வான் மீது தோன்று மென்று
சொன்னால் யார்தான் நகையாரோ?

வெல்லும் குணத்து எம். ஜி. ஆர்.
வெற்றி முத்தம் தருகவே!

வீரம் செறிந்த இளம்புலியே
விரும்பும் முத்தம் தருகவே!

சீறும் பகையைத் தூசாக்கி
சினத்தால் எதிர்ப்பின் முனைமுறித்து,

திகழும் தலைவன் நீயென்று
தெரிந்து கொண்ட காரணத்தால்

நாறும் மலநா றிப்பூவாய்
நாடே நகைக்கும் தி. மு. க

நரிபோல் வஞ்சம் புரிகிறது.
நாளும் பழியைச் சொரிகிறது

ஏறு நீயென் றறிந்திருந்தும்
இறக்கத் துணிந்த எலிபோல

ஏனோ அதுவும் துணிந்ததையா ?
இதைத்தான் விதியென் றுரைப்பாரோ

நீறு பூத்த நெருப்பாக
நிற்போய் முத்தம் தருகவே

நிலவாய்க் குளிரும் எம். ஜி. ஆர்
நீஓர் முத்தம் தருகவே !

(வேறு)

பெயரும் புகழும் உலகில் நிலவப்
பிறந்து சிறந்த புதல்வனே

பிழைகள் புரிவோர் தமையே ஒறுக்கும்
பெருமைக் குரிய தலைவனே

உயிராய் உயிர்வாழ் உடலாய்த் தமிழர்
உணர்வாய் உலவும் இனியனே

ஒளியாய் வளியாய் விழியாய் மொழியாய்
உருவாய்க் கனிந்த அழகனே

பயிராய் விளைந்து மணிநெற் கதிராய்
பசியைத் தணிக்கும் அருளனே

பலரும் வணங்கும் பலமும் புலமும்
பலவாய் அமைந்த எம். ஜி. ஆர்.

வயிரம் அனைய உறுதி உடையோய்
வழங்கு திருவாய் முத்தமே

வறியோன் மகிழ புதையல் கிடைத்த
வகைபோல் தருக முத்தமே !

அழகுத் தமிழிற் கவிதைக் கலையில்
அரிய பெரிய புலவரும்

அறிவுத் துறையில் நிறைவு மிகுந்த
அறிஞர் பலரும் கலைஞரும்

சுழலும் உலகில் உனது பெருமை
சுழன்று சுழன்று சொலச் சொல

தொடரும் புகழும் பொருளும் நிறைந்து
சுகமும் களிப்பும் வருமென

பழகும் தமிழர் உலகம் மகிழ
பரவித் துதித்தே இறைஞ்சுவார் !

பணிவும் கனிவும் குணமும் மணமும்
பழைய மரபும் விளங்கிட

அழகுப் பிழம்பு கலவைக் குழம்பு
தருக அமுத முத்தமே !

அரசே எனது மனமும் குளிர
அளித்தி அளித்தி முத்தமே !


வருகைப்பருவம்

நம்பிக்கை கொண்டவரை நலிவின்றிக் காப்பாற்றி
நன்மையொடு மேன்மை தந்து

நாளோடும் பொழுதோடும் நல்லவர்பால்
உரையாடும்
நாயகனே ! அன்பே ! உனை

நம்பியவர் இதுவரைக்கும் நானிலத்தில்கெட்டதில்லை
நம்பாமல் கெட்டோர் உண்டு.

நல்லதமிழ்த் தென்றலும் அதனால்தான்
இன்றுன்னை
நம்பியே கிடக்குதையா !

தம்பியர்கள் அனைவரையும் அவரவர்கள் தகுதி
கண்டு
தலைநிமிர்த்தி வைத்தார் அண்ணா

தாரணியில் அவர்க்குப்பின் தம்பியரை
வளர்த்து விடும்
தகுதியுள்ள தலைவன் நீதான் !

வம்பர்களின் வாயடக்க வளர்கின்ற எம். ஜி. ஆர்
வடிவழகன் இவண் வருகவே

வசைபாடும் மனிதரையும் இசைபாட வைத்து
விடும்
வல்லவன் நீ வருகவே !

தன்னாலே ஓர்மனிதன் பிறர் உதவி இல்லாமல்
தாரணியில் உயர்வ தில்லை,

தன்னாலே கழனிகளில் உழவர்களின்
உழைப்பின்றி
சம்பாநெல் விளைவதில்லை.

உன்னாலே பதவிதனில் அமர்ந்தவர்கள் எல்லாரும்
உன் சிறப்பை உணரவில்லை.

உலகத்தில் நன்றி கொன்றோர் யாராக
இருந்தாலும்
உருப்படப் போவதில்லை.

இந்நாட்டில் தி. மு. க. ஏற்ற மிகு அரியணையில்
ஏறியதும் உன்னா லன்றோ !

இதற்கெல்லாம் காரணமாய் இருந்ததனால்
அவ்வரசை
இறக்கியதும் நீயே யன்றோ !

முந்நாளில் அரசாண்ட மூவேந்தர் தனிப்புகழை
முழுதும்கொண் டோய் வருகவே

முடியாத செயல்களையும் முடித்து வைக்கும்
எம், ஜி. ஆர்.
முகமலர்ந் தே வருகவே

பண்ணாலே பாட்டுக்குச் சிறப்புண்டு; பாட்டுக்குப்
பதத்தாலே பெருமை யுண்டு

படித்தால் தான் சிந்திக்கும் திறனுண்டு:
சிந்தித்தால்
பலபொருளில் தெளிவும் உண்டு.

பெண்ணாலே நல்லறங்கள் வளருமென்று கவிமணியும்
பிழையின்றிச் சொன்னார் அன்று

பெருமை மிக்க தமிழ்நாட்டின் பெரும் புரட்சித்
தலைவரென்று
பேசுபுகழ் உனக்கே உண்டு,

எண்ணாலும் எழுத்தாலும் இயம்பவொண்ணா
நாடுன்னால்
என்றென்றும் சிறப்ப துண்டு.

எப்போதும் இலக்கணத்தில் தப்பேதும்
இல்லாமல்
என்கவியும் மிளிர்வ துண்டு.

கண்ணாலே கதை பேசும் கன்னியர்கள் மயங்குகின்ற
கட்டழகன் இவண் வருகவே

காட்டாத வித்தையெல்லாம் காட்டுகின்ற
எம். ஜி. ஆர்.
களிறே நீ இவண் வருகவே

அச்சாணி ஒன்றைவைத்தே சக்கரமும் சுழல்கிறது!
ஆகாயம் தன்னை வைத்து!

அருங்கதிரும் சுழல்கிறது; பூமியும்ஓர் அச்சிலே
அன்றுடம் சுழலக் கண்டோம் !

கச்சணிந்த மங்கையரின் கருவிழிகள் சுழற்சியெலாம்
காளையரால் நடக்கக் கண்டோம்

காதலெனும் சுழற்சியெலாம் பருவத்துக்
கிளர்ச்சியிலும்
கவர்ச்சியிலும் நடக்கக் கண்டோம்.

இச்செகத்தில் தமிழ்நாட்டின் அரசியலே
இற்றை நாள்
எம். ஜி. ஆர் நின்னை வைத்தே

இரவு பகல் சுழல்வதனை யாம்கண்டோம்!
எங்களின்
இல்லத்தின் ஒளி விளக்கே

நச்சரவக் கொடுமைகளை அறுத்தெறிய வளர்கின்ற
நல்லவன் இவண் வருகவே

நற்புலவர் கொண்டாடும் பொற்புடைய
எம். ஜீ. ஆர்.
நற்பிள்ளை நீ வருகவே

கூவாத குயிலினங்கள் பேசாத கிளியினங்கள்
குவலயத்தில் எங்கும் இல்லை

கோடைமுகில் கண்டாட மறுக்கின்ற
மயிலினத்தை
குளிர் சோலை கண்டதில்லை.

தாவாத மானினத்தைக் கானகங்கள்
கண்டதில்லை.
தழுவாத தென்றல் இல்லை

சமர்க்களத்தில்சரியாதகளிறுகளைத்தமிழ்நாட்டுச்
சரித்திரங்கள் கண்டதில்லை

நாவாலே நீ போடும் ஆணைகளைச் சிரமேற்று
நல்லுயிரைக் கொடுப்பதற்கு

நல்லதமிழ்த் தொண்டர்படை வெள்ளமென
வரும் சிறப்பு
நாட்டில்பிற கட்சிக்கில்லை.

பாவாலே உன்பெருமை பேசுவதில் வல்லவன்நான்
பகலவன் நீ வருகவே

பார்த்தாலே பசிதீரும்அழகுடைய எம். ஜி. ஆர்.
பசுமதலை நீ வருகவே

உன்வீட்டுச் சோறுதின்று வளர்ந்தவரில்பலரின்று
உனக்குத்தான் துரோகியானார்.

ஓட்டளித்த மக்களுக்கு வேட்டுவைக்கும் அமைச்சருக்
குவமையென ஆகிப்போனார்

அன்புடனே யார்க்குநீ உதவிசெய்ய நினைத்தாலும்
அதற்குமோர் முறைமை உண்டு

அதுபற்றித் தமிழ்நூலில் ஆதாரம் பலவுண்டு
அரும்புலவர் அறிவர் நன்று.

''பன்னகம் தனக்கமிர்தம் கொடுத்தாலும் விட மொழியப்
பயன் கொடா'' தென்றான் வில்லி

பண்புடைய ஆள்பார்த்தே உதவினால் அது கொடுக்கும்
பலனையெலாம் மிகவும் அள்ளி

உன்னைவைத்தே நாடாளஉயர்மக்கள்நினைக்கின்றார்
உத்தமனே ஓடி வருக,

உண்மையுடன் திண்மையுடன் ஒளிர்கின்ற எம். ஜி. ஆர்.
ஓர் குழந்தை வருக! வருக!

(வேறு)

நெஞ்சில் உறுதி படைத்தவனே
நேர்மை ஒழுக்கம் உடையவனே

நீதி தேவன் வாழுமிடம்
நீணிலத்தில் எந்த இடம் ?

வஞ்சம் பொய்ம்மை இலாமல் நீ
வாழ்கின் றுயே அந்த இடம்.

வம்புக் கருணு நிதிபார்ச்சல்
வால றுந்த பல்லியைப் போல்

அஞ்சித் துடித்தல் எந்த இடம் ?
அதுவும் நீயே வாழுமிடம்

ஆமாம் அதுவே தேவசபை
அன்பே அதனின் இன்பநிலை

கொஞ்சும் குழந்தாய் எம். ஜி. ஆர்.
கோமா னே நீ வருகவே

குவளை யாரை அயிரை என்ருல்
கொக்கு நீதான் வருகவே.

நல்ல மனிதன் என்பதுவும்
நல்ல நண்பன் என்பதுவும்
நடந்து கொள்ளும் முறைபார்த்து
நான்கு பேரும் சொல்லுவது !

வெல்லும் குணத்தான் என்பதுவும்
விவேகம் உடையான் என்பதுவும்
விளக்கும் செயல்கள் தமைப்பார்த்து
விவரம் தெரிந்தோர் சொல்லுவது !

எல்லாக் குணமும் ஒருங்கமைந்தே
இருப்ப தால்தான் அயல் நாட்டில்
இருப்போர் கூட உனைப் பார்க்க
எண்ணி இங்கே வருகின்றார்.

பொல்லாப் பில்லா எம். ஜி. ஆர்.
பொன்போல் நீயும் வருகவே
புரட்சி செய்யும் என்தலைவ
பூவே வருக ! வருகவே !

(வேறு)

அமுத மொழுகும் இனிய தமிழை
மொழியும் இனத்தின் சரிதையை
அறிஞர் எழுதத் தமது கருத்தை
அளித்த குதலை மதலையே

குமுதம் மலர விரியும் உதய
நிலவின் அழகு மழலையே
கொடிய மனத்தை உடைய மனித்தர்
செயலைப் பொறுக்கும் இதயமே

சமயம் பலவும் உரைக்கும் பொருளின்
தகைமை உணர்ந்த இறைவனே
தருமப் பயிரைத் தினமும் வளர்க்கும்
இதய நிலத்துக் கிழவனே

இமய மிசையில் கொடியைப் பொறித்த
இனத்து மழலை வருகவே
எனது கவிதை நறையை மடுக்க
எழுந்து வருக வருகவே

கயல்கள் துடித்து வரண்ட குளத்தில
கலங்கித் தவித்துக் கிடக்கையில்
கரைகள் உடைய நதிகள் பெருகிப்
புகுந்து கலந்த நிலையென

புயலில் மழையில் பொருளை இழந்து
புலம்பித் தமிழர் தவிக்கையில்
புவனப் பயணத் தொடரை முறித்துத்
திரும்பி உதவி அளித்தனை

முயல்கள் அனைய செயல்கள் அனைத்தும்
விரைந்து புரியும் மனத்தினை
முழங்கும் கடலைப் புறத்தில் விடுத்து
நிலத்தின் பரப்பை விரித்திட

வியக்கும் வகையில் உரைக்கும் புதல்வன்
விரும்பி நெருங்கி வருகவே
விதியைத் துரத்தி ஒழித்த அரசன்
விரைந்து வருக வருகவே



அம்புலிப் பருவம்

உன்னொளியால் உலகத்தின் இருளோட்டி
வானத்தில்
உலவுகின்றாய் வெண்ணி லாவே
உன்னைப்போல் அருளொளியால் ஏழைகளின்
இருளோட்டும்
உயர்நிலவாம் எம்குழந்தை

கண்ணசைந்தால் மனமசையும்! கையசைந்தால்
நாடசையும்
கலை நிலவே நீ யசைந்தால்
கடல் சூழ்ந்த ஞாலத்தில் நாடேதும்
அசைந்ததுவாய்
கதையேனும் இருப்பதுண்டோ ?

உன்மேனி தேய்வதுண்டு; எம். ஜி. ஆர். புகழ்மேனி
ஒரு நாளும் தேய்வதில்லை.
உண்மையிதைச் சொல்கின்றேன் நன்மையினை
உரைக்கின்றேன்
ஒன்று நீ கேட்க வேண்டும்.

அன்னவர்பால் பலகற்று அவர் போலச் சிறப்படைய
அம்புலீ ஆட வாவே!
அவர் பெயரில் பாதியுனக் கிருப்பதால்
நாணமல்
அம்புலீ ஆடவாவே !

களங்கமுண்டு மதியுனக்கு; களங்கமிலாமதியிவர்க்கு;
கங்கையிலே நீராடினல்
கண்டவினை தீருமென்பர்; எம். ஜி. ஆர். எனும் புனிதக்
கங்கையுடன் நீ யாடினல்

களங்கமெலாம் உனைவிட்டுக் காற்றறிந்த மேகம் போல்
கடுகிமிக விரைந்தோடிடும்

கனல்பட்டால் சருகெல்லாம் கருகாமல் என்செய்யும்?
கருநாவற் பழத்தைப் போல

விளங்குகின்ற இரவில்தான் உனைமக்கள் விழைவார்கள்;
வீங்கு புகழ் எம். ஜி. ஆரை
வேளையென்ன நேரமென்ன என்றறிந்து பாராமல்
விரியுலகோர் விரும்புவார்கள்.

அளப்பரிய பெருமையிவர்க்கிருப்பதால் இவருடனே
அம்புலீ ஆடவாவே !
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி நீ மகிழ்ந்திட
அம்புலீ ஆட வாவே !

விண்மீன்கள் கூட்டத்தில் விழிகளிலே பளிச்சென்று
வெண்ணிலவே தோன்றுவை நீ!
விவரமுள்ள தமிழ்நாட்டின் அரசியலில்மக்களது
விழிகளிலே தெரிவ தெல்லாம்

கண்ணியத்தில் குறையாத கடமையிலே தவருத
கட்டுப்பாட்டில் சிறந்த
கலேவேந்தாம் எம். ஜி. ஆர் எனும்குழந்தை ஒன்றேதான்!
கற்றறிந்தோர் இதையறிவர்

திண்ணமுடன் இவர்கரத்தில் செங்கோலும் இருந்ததெனில்
தேசத்தில் சமதர்மமும்
செழிக்குமென எண்ணித்தான் தென்ஞட்டின் அரசதனே
சேயான எம். ஜி. ஆராம்

அண்ணலிடம் அளித்துள்ளோம் ஆதலால் அமுதவொளி
அம்புலீ ஆடவாவே !
அவர் மனமும் மிக மகிழஉன்மனமும்தான்மகிழ
அம்புலீ ஆட வாவே !

ஒளி சிந்தி நீ ஆடும் வேளையிலே முகில்சூழ்ந்து
உனை மறைத்தல் செய்யக் கூடும்.
உள்ளத்தால் கறையுடையோர் பலர்சேர்ந்து
சதி செய்து
உத்தமராம் எம். ஜி. ஆரின்

ஒளிப்புகழைமறைப்பதற்குமுயன்றார்கள்;அவர்களோ
உளம்விட்டே மறைந்து போனார்,
உன்வரவால் சில பூக்கள் மலர்வதுண்(டு)
இவர்வரவால்
உலகத்தார் நெஞ்சம் மலரும்

ஒளி நிலவே உன்னொளியால் சகோரமெனும்
பறவையினம்
உயிர் வாழும்; அதைப் போலவே
உளம் வாடும் எளியவர்கள் எல்லாரும்
எண்குணத்தால்
உயர்வான இக்குழந்தை

அளிப்பதனால் வாழ்கின்றார்; ஆதலால் இதனுடனே
அம்புலீ ஆடவாவே!
ஆகாய வீதியிலே ஆடாமல் இவருடனே
அம்புலீ ஆடவாவே!

பிறையென்றும் மதியென்றும் கலையென்றும்
நிலவென்றும்
பேரழகுத் திங்களென்றும்
பெயர்கள்பல உனக்குண்டு; பெருமை மிகு
எம். ஜி. ஆர்
பேரழகுப் புதல்வனுக்கும்

மறையாத புகழ்ப் பெயர்கள் பொன்மனச்
செம்மலென்றும்,
மக்களின் திலகமென்றும்
மழைபோல வழங்குகின்ற பரங்கிமலைப்
பாரியென்றும்
மாபுரட்சித் தலைவரென்றும்

நிறையுடைய பெயர்களின்னும் நிரம்பவுண்டு;
ஞாலத்தின்
இடக்கண்ணாய் நின்னைச் சொல்வர்;
நீடுதமிழ் நாட்டவர்க்கு இருகண்ணும்
இவராக
நீணிலத்தில் இருப்பதாலே

குறையறியா எம்.ஜி.ஆர் குழந்தையுட னேநீயும்
கொஞ்சியே ஆடவாவே!
கொட்டுமொளி அம்புலியே பட்டுமலர்க்
குழந்தையுடன்
கொஞ்சம் நீ ஆடவாவே!

சுதந்திரமாய்வானத்தில் சுற்றிவரும்வெண்ணிலவே
சுந்தரியின் முகத்தைப்போல
சுடர்வீசிச் சிரிக்கின்ருய் எனச்சொல்வர்
கவிப்புலவ ர்!
சொல்வதெல்லாம் சரி; ஆயினும்

மதயானை நடையுடனும் மடங்கலைப்போல்
நோக்குடனும்
மலர்போலச் சிரிப்பும் கொண்ட
மாண்புடைய எம்.ஜி.ஆர்
மணிமுகத்திற்கீடாக
மதியேநீ ஒளிரு வாயோ?

இதழ்திறந்தே இவர்கூறும் வார்த்தையெலாம்
கோடிபெறும்
இப்பெருமை உனக்குண்டாமோ?
இராமனது முகம்பற்றி கம்பன் சொன்ன
வாக்கியம்தான்
இவருக்கு மிகப் பொருந்தும்

நிதம்புதிய பொலிவொளிரும் எம்.ஜி.ஆர்.
முகம்கண்டு
நித்தம்நீ ஆட வாவே!
நெடுவான அம்புலியே நேர்மையுள்ள
இவருடனே
நேர் நின்று ஆட வாவே!

வண்ணமலர்க் கூட்டமெலாம் வாசனைகள்
தருவதில்லை
வான மழைத் துளிகளெல்லாம்
வாய்திறந்த சிப்பிக்குள் நேராகப் போய்
வீழ்ந்து
முத்தாக விளைவதில்லை.

மண்ணுலகில் பிறந்தவரில் எம்.ஜி.ஆர்.
தமைப்போல
மாட்சிமைகள் கொண்டோர் இலை
மலைகளிலே இமயத்தை நிகர்த்ததொரு
பெருமலையை
மாநிலத்தில் கண்டதில்லை.

புண்ணியங்கள் செய்யாதோர் எம்.ஜி.ஆர்
எனும் பெயரைப்
புகல்வதற்கும் தகுதியில்லை.
புரியாத நிலவே நீ புரிந்துகொள்வாய்;
இவராலே
புகழுண்டு; கேள்என் சொல்லை!

அண்ணாந்து பார்க்கின்ற ஆகாயம் தன்னைவிட்
டம்புலீ ஆட வாவே!
அரும்பணிகள் பலபுரியும் கரும்பனைய
இவருடனே
அம்புலீ ஆட வாவே!

வெள்ளிக்குக் கொடுக்கின்ற மதிப்பை விடப்
பொன்னுக்கு
விரியுலகில் மிக மதிப்பு
வெள்ளி போல் நிறம் உனக்கு! பொன் போல
நிறம் இவர்க்கு
விளம்புநீ யார்க்கு மதிப்பு?

உள்ளபடி ஆராய்ந்தால் எள்ளளவும் நீயிவர்க்(கு)
உவமையென ஆக மாட்டாய்
உயர்வான வானத்தில் பார்ப்பதற் கழகாக
உலவுகின்ருய் என்பதாலே

தெள்ளுதமிழ்ப் பாவலன் நான் எம். ஜி. ஆர்
என்கின்ற
சேயோடு நீ மகிழ்ந்து
தினந்தோறும் ஆடலாம் என நினைத்தே
அழைக்கின்றேன்
சிந்தையிலே இதனைக் கொள்வாய்

அள்ளஅள்ளக் குறையாத புகழ்பெற்ற இவருடனே
அம்புலீ ஆட வாவே!
ஆடுகின்ற மேக மென்னும் தேரேறி
இக்கணமே
அம்புலீ ஆட வாவே!

நீசிரித்தால் ஓரர்த்தம்; நித்திலம்போல் இவர்
சிரித்தால்
நிறைந்திருக்கும் பல்வே றர்த்தம்
நின் பார்வை ஓர்பார்வை; இவர் பார்வை
பலபார்வை
நெடுங்கருத்துப் பொதிந்த பார்வை

பூ சிரித்தால் மணம்கமழும். பொன்னுன இவர்
நெஞ்சம்
பூரிப்பால் சிரித்த தென்ருல்
பூமியே குளிர்ந்துவிடும்! புனிதத்தின்
வடிவாகப்
பூத்திருக்கும் குழந்தையான

தேசுடைய எம். ஜி. ஆர் செல்வத்தைப்
பார்ப்பதற்குத்
தேச மெங்கும் இருந்து பல்லோர்
தினந்தோறும் வருகின்ருர் தெய்வத்தை
தரிசிக்கும்
திருவடியார் கூட்டம் போல!

ஆசுகவி பாடுவதில் வல்லவன்யான்
அழைக்கின்றேன்
அம்புலீ ஆட வாவே!
ஆண்டவனைப் போல் விளங்கும் எம். ஜி. ஆர்
திருமுன்னர்
அம்புலீ ஆட வாவே!

சிவபெருமான் தன்தலையில் நிலவுன்னைச் சுமப்பது
வாய்
சிவபுராணப் புலவர் சொல்வர்.
செப்புமிந்த வார்த்தைதரும் சித்தாந்தத்
தத்துவங்கள்
தெரியாத மூடர் சிலர்

சிவனெங்கே அவன்தலையில் நிலவெங்கே எனக்
கேட்டு
சிற்றறிவுக் கெட்டாததால்
தேசத்தில் குதிக்கின்றார்; அதைப் பற்றிக்
கவலையில்லை;
சிறப்புடைய எம். ஜி. ஆரை

புவனமுள்ள தமிழரெலாம் நெஞ்சத்தில் சுமக்கின்றார்
புலவரெலாம் கவிதை தன்னில்
பொழுதெல்லாம் சுமக்கின்றார்; புகழார்ந்த
கோட்டையிலே
போட்டிருக்கும் அரியாசனம்

இவரைத்தான் சுமப்பதனால் புதுச்சிறப்புப்
பெறக்கண்டோம்.
இதனால் நீ ஆடவாவே !
எழிலறிந்த அம்புலியே பழியறியா இவருடனே
இப்போதே ஆடவாவே!

சிற்றில் பருவம்

கலிங்க வேந்தன் செருக்கொழித்த
கருணு கரன்போல் வடபுலத்து
கனக விசயர் செருக் கொழித்த
கவிக்கோ அண்ணன் குட்டுவன்போல்

இலங்கை வேந்தன் செருக்கொழித்த
எழிலார் கரிகால் வளவனைப்போல்
இரும்பால் இதயம் படைத்திருக்கும்
இடும்பன் போன்ருேர் பகைச்செருக்கைப்

பிளந்து வகிர்ந்து கூறுக்கும்
பேராற் றல்கள் படைத்தவனே
பெம்மான் எம். ஜி. ஆர்- என்னும்
பெயரில் வளரும் இளமதலாய் !

அளந்து தராமல் அள்ளித்தரும்
அரசே சிற்றில் சிதையேலே !
ஆளும் தகுதி யுடையவனே
அடியேம் சிற்றில் சிதையேலே !

என்னைப் போன்ற கவிஞர்களின்
இல்லம் சிறக்க உலைபொங்க
இயன்ற வரைக்கும் உதவிசெய்யும்
இதயம் படைத்த உத்தமனே !

நன்றி மறவாப் பாவலரில்
நானும் ஒருவன்; அதனாலே
நாளும் உனக்கே கோயில்களில்
நலனை வேண்டித் தொழுகின்றேன்.

என்றும் திடமாய் நீயிருந்தால்
எம்மைப் போன்றோர் வாழ்வதற்கும்
இயலும்; அதனால் தொழுகின்றேன்
ஏலக் காடாய் மணப்பவனே !

தென்றல் போன்ற என்பிள்ளாய்
சிறியேம் சிற்றில் சிதையேலே !
சிந்தை கவர்ந்த எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே !

அடித்த போதும் நீயேதான்
அணைத்த போதும் நீயேதான்
ஐயா உன்னை விட்டுவிட்டால்
ஆத ரிப்போர் எமக்குண்டோ?

தடித்த தோலை உடையவர்கள்
சமயம் அறிந்து நீசெய்த
தக்க உதவி தனைமறந்து
தாறு மாருய் ஏசுகின்ருர்.

குடிக்கும் பழக்கம் உள்ளதனுல்
குமட்டிக் குமட்டிப் பேசுகின்ருர்.
குடியே அறியாப் பரம்பரையில்
குருத்து விட்டோன் சொல்கின்றேன்.

வடிவே சிறந்த எம். ஜி. ஆர்.
வறியேம் சிற்றில் சிதையேலே !
வனப்பு மிகுந்த பொற்பிள்ளாய்
வறியேம் சிற்றில் சிதையேலே !

சிலநே ரத்தில் உனேப்பார்த்தால்
சிரித்துச் சிரித்துப் பேசுகின்ருய்
சிலநே ரத்தில் சிரிக்காமல்
சேதி முடிந்து சிரிக்கின்ருய்.

பலநே ரத்தில் உன்சிரமம்
பாரா தவர்கள் சேர்ந்துவந்து
பல்வே ருன சிக்கல்களேப்
பகரும் பொழுதும் சளைக்காமல்

உளநே ரத்தில் தீர்க்கின்ருய்
உலகில் தசாவ தானியோநீ!
உன்றன் அன்பே இல்லேயென்ருல்
உலகில் எம்மை மதிப்போர்யார்?

வளமே சிறந்த உடலுடையாய்
வறியேம் சிற்றில் சிதையேலே!
வண்ணம் மிகுந்த எம். ஜி. ஆர்.
வறியேம் சிற்றில் சிதையேலே!

பாட்டுக் குயில்கள் கடைசிவரை
பாட்டுப் பாடிச் சாவதைப்போல்
பரந்த உன்றன் பெரும்புகழைப்
பாடிப் பாடிக் கடைசியிலே

கூட்டைத் துறந்து போவதுதான்
கொள்கை என்று கொண்டுவிட்டேன்
குணத்தின் குன்றே! எம். ஜி. ஆர்.
கூறும் வார்த்தை ஒன்றறிவாய்

நாட்டில் நல்லோர் தீயோரை
நன்ருய் அறிந்த பின்உதவு
நன்றி மறவா ஒருசிலர்தான்
நாளும் உன்னைப் பின்தொடர்வார்.

தீட்டிவைத்த ஓவியமே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
தீரம் மிகுந்த எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே!

போற்றிப் புகழ்வோர் வார்த்தையெலாம்
பொதுவில் மகிழ்ச்சி தந்தாலும்
புகழும் மொழிக்குள் எங்கேனும்
புதைந்து கிடக்கும் வஞ்சங்கள்.

தோற்றம் முதிர்ந்த திருக்குறளில்
''தொழுத கையுள் படையொடுங்கும்''
சூட்சு மத்தை அதனலே
சொல்லி வைத்தார் வள்ளுவனர்.

ஆற்றல் மிகுந்த அறிவாலே
அதனை நன்ருய் உணர்ந்தவன்நீ
அவ்வாறிருந்தும் அழகரசே
அடியேம் சிற்றில் உடன்வந்த

சீற்றம் என்ன? இளமதலாய்
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சிரித்து மயக்கும் எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே!

உன்னைக் காண வரும்போது
ஒருமு றைநீ பேசிலையேல்
உள்ளம் அடையும் வேதனையை
உரைக்கத் தகுமோ உத்தமனே!

பொன்னைப் போலே உனதுமுகப்
பொலிவைக் காணும் வாய்ப்பிலையேல்
பூவைப் போலே வாடுகின்றார்
புவியில் உன்னைச் சூழ்ந்தவர்கள்!

தன்னை உணர்ந்து பகைவர்களின்
தரத்தை உணர்ந்து தமர்வலிமை
தானும் உணர்ந்த வித்தகனே
தர்மர் போன்ற சிந்தையனே!

சின்னக் குழந்தாய் எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் மல்கு எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே!

கடமை கடமை கடமையென்று
காலமெல்லாம் உழைப்பவனே
காலமெல்லாம் உழைத்துழைத்துக்
கட்சிக் காகக் கொடுப்பவனே!

கடல் போல் பரந்தஅறிவுடைய
காஞ்சித் தலைவன் கொள்கைகளைக்
கடைப்பி டித்து நிலைநிறுத்தி
கற்றோர் போற்ற உயர்ந்தவனே!

உடலை உயிரை மக்களுக்கே
உரிமை யாக்கி வாழ்வதனால்
உன்னை யறிந்தோர் தம்முயிரை
உனக்கே ஆக்கி வாழ்கின்றார்.

திடமே சிறந்த எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே!
தேசம் புகழும் எம், ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே!

குறைந்த கால அளவினிலே
குறையா வலிமை மிகப்படைத்த
கொள்கை மிக்க கட்சியினைக்
குவல யத்தில் தோற்றுவித்து

நிறைந்த உலக அரசியலில்
நிகழ்த்த முடியாச் சாதனையை
நிகழ்த்திக் காட்டிப் பெருமைபெற்ற
நின்னைப் போல ஓர்தலைவன்

உறைவ துண்டோ எங்கேயும் ?
உரைத்து ரைத்துப் பார்க்கையிலே
ஒளிரும் பொன்போல் ஒளிவீசும்
உண்மை அறிவே ! உள்ளமெனும்

சிறையில் எம்மை அடைத்தவனே,
சிறியேம் சிற்றில் சிதையேலே
திகழும் ஞான எம். ஜி. ஆர்.
சிறியேம் சிற்றில் சிதையேலே!

அண்ணா புகழைச் சிதைத்தவரை
அண்ணா பெயரைச் சிதைத்தவரை
அண்ணா கண்ட இலட்சியத்தை
அகிலம் தன்னில் சிதைத்தவரை

மண்ணில் காந்தி நடந்துசென்ற
மார்க்கம் தன்னைச் சிதைத்தவரை
மார்க்சு தந்த சித்தாந்த
மணிமண் டபத்தைச் சிதைத்தவரை

எண்ணிச் சிதைக்கும் வலிவுடைய
எம். ஜி. ஆரே என்சிற்றில்
ஏனோ சிதைக்க நினைக்கின்றாய்
இதுவோ உன்றன் பணியரசே ?

திண்மை உடைய மனம் படைத்தோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேர்ந்த பண்புத் திருக்குழந்தாய்
சிறியேம் சிற்றில் சிதையேலே !

சிறுபறைப் பருவம்

நீந்தாத பொருளையெலாம் கடலலைகள் கரையோரம்
நித்தநித்தம் ஒதுக்கு தல்போல்
நீணிலத்தில் பொருளில்லா மானிடரைச்
சமுதாயம்
நெடுந்தூரம் ஒதுக்கி வைக்கும்!

மாந்தர்களின் கூட்டத்தில் உனைத்தூற்றித்
திரிகின்ற
மடையர்களை நல்ல வர்கள்
மனத்திற்கும் நினைவிற்கும் எட்டாத தூரத்தில்
மாநிலத்தில் ஒதுக்கி வைப்பர்!

காய்ந்தாலும் நிலாப்போலக் காய்கின்ற
குணவானே!
கழனி விழும் விதையைப்போலே
கருத்துக்கள் உதிர்ப்பவனே! திருத்தங்கள்
செய்பவனே
கடமையுடன் நாட்டுக் காகத்

தேய்ந்தால் சந்தனம்போல் தேய்கின்றஎம்.ஜி.ஆர்.
சிறுபறை முழக்கி யருளே
செக்கச் சிவந்தபிள்ளை சிங்காரப் பொற்பிள்ளை
சிறுபறை முழக்கி யருளே!

பணத்தாலே சாதிக்க முடியாத காரியங்கள்
பார்மீதில் இல்லை யென்று
பகர்வார்கள் அனுபவப் படிப்பினைப்
பெற்றவர்கள்:
பகர்ந்தமொழி இதை மாற்றியே

குணத்தாலே தன்னுடைய திறத்தாலே அறிவாலே
கூறுகின்ற வார்த்தை யாலே
கொள்கைதந்த பிடிப்பாலே மக்களது
செல்வாக்கைக்
குறையாமல் பெற்ற தாலே

பணத்தாலே தி. மு. க. செய்யமுடி யாதவற்றைப்
பலர்வியக்கத் திண்டுக் கல்லில்
பாரதமே அதிசயிக்க மாயனையே ஜெயிக்க
வைத்துப்
படிப்பினைகள் நீ கொடுத்தாய் !

மணத்தோடு வாழ்கின்ற மழலையே சிறுபறை
மகிழ்வோடு முழக்கி யருளே !
மலர்போன்ற எம். ஜி. ஆர் மதலையே சிறுபறை
மகிழ்வோடு முழக்கி யருளே !

அண்ணனென்ற புத்தகத்தின் அட்டைப்படம்
ஆனவன்நீ
அவர் வழியில் செல்பவன்நீ
அவரைப்போல் வெல்லுகின்ற சாதுர்யம்
மிக்கவன்நீ:
அறிந்தவர்கள் மறுக்க மாட்டார்:

கண்ணனது கீதையினால் அருச்சுனனும்
தெளிவுபெற்று
காண்டீபம் வளைத்து நின்றான்:
கண்ணனைப்போல் நீயிருக்க அர்ச்சுனர்போல்
மக்களெல்லாம்
காண்டீபம் எடுத்துக் கொண்டு

திண்ணமுடன் சமுதாய விரோதிகளின்கூட்டத்தை
தினந்தோறும் எதிர்க்கின்றார்கள்
தென்னாட்டின் அரசியலில் வன்முறையை
விதைத்துவரும்
சிறுமதியோர் தமை ஒடுக்கும்

திண்ணியனே எங்களது புண்ணியனேஎம்.ஜி.ஆர்.
சிறுபறை முழக்கி யருளே
தென்பொதிகைச் சந்தனம்போல் திருமேனி
படைத்தவனே
சிறுபறை முழக்கி யருளே!

உன்ஞல்தான் தமிழ்நாட்டில் உயர்வானசோசலிசம்
உருவாகும் என்கின்ருர்கள்.
உன்ஞல்தான் துரோகிகளேத் தண்டிக்க
முடியுமென்றும்
உயர்வாகச் சொல்கின்ருர்கள்.

என்ஞளும் உவர்நிலத்தில் விளேவதனே எதிர்
பார்ப்போர்
எவரேனும் இருக்கின் ருரோ ?
இல்லையன்ரே ! அதைப்போல ஊழல்மிகு
கட்சிகளால்
இந்நாட்டில் பலன்கள் உண்டோ ?

பொன்ஞலே செய்தநகை பூவையர்கள் அணிந்து
கொண்டு
பூரித்து நிற்பதைப் போல்
பொன்னகைபோல் உனே நாங்கள்
போட்டுக்கொண் டிருக்கின்ரேம்
பூப்போன்ற எங்கள் நெஞ்சில் !

சின்னச்சிற்றெறும்பன்ன சுறுசுறுப்புக்கொண்டவனே
சிறுபறை முழக்கி யருளே
சின்னஞ் சிறுபிள்ளே எம். ஜி. ஆர் எனும்பிள்ளே
சிறுபறை முழக்கி யருளே !

காயாத கானகம்போல் கருணைமனம்உடையவன்நீ
கானல்நீர் போல நாட்டில்
காட்சிதரும் தலைவர்களில் மாட்சிபெற்ற
தமிழ்த்தலைவன்
காசியினில் நீ ஒருவனே

சாயாத உலகத்தில் தலைவனவன்ஆணைகளைத்
தள்ளிவிட்ட படை வீரர்கள்
சரித்திரத்தில் வென்றதற்குச் சான்றில்லை!
இதைச்சிலபேர்
தாமுணர்ந்தால் நன்மை யாகும்!

ஓயாமல்ஒலிக்கின்ற சமுத்திரம்போல் எப்போதும்
உன்புகழே இனி ஒலிக்கும்
உன்புகழைப் பாடினால் என்போன்ற
கவிஞர்களின்
உள்ளங்கள் மிக இனிக்கும்

தேயாத நெஞ்சார்ந்த சிரஞ்சீவிஎம்.ஜி.ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!
செந்நல் நாற்றுகத் தினம்வளரும் எம்.ஜி.ஆர்
சிறுபறை முழக்கி யருளே!

சீராமன் இருக்குமிடம் சீதைக்கே அயோத்தி
யெனச்
செப்பி வைத்தான் கம்ப நாடன்
சீராமச் சந்திரனே நீயிருக்கும் இடமேஇத்
தேசத்தில் எமக்கயோத்தி

தீராத் காதல்மிகு கோவலனுர் அழைத்தவுடன்
செழுங்கற்புத் தெய்வமான
செல்வமகள் கண்ணகியும் நள்ளிரவில்
நடந்தகதை
சிலப்பதி காரம் பாடும்

ஆராயும் தெளிமனத்தோய் நீஎங்கேஅழைத்தாலும்
அன்போடு நாங்கள் வருவோம்
அசோதைமகன் பின்னுலே ஆவினங்கள்
சென்றதெல்லாம்
அன்றுகண்ட நிகழ்ச்சிதானே

தேரா்த மனங்களேயும் தெளியவைக்கும் எம்.ஜி ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!
தேன்சிந்தும் வாய்மழலை தான்சிந்தும்
எம் ஜி ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!

பட்டாள மன்னவரின் படைத்தலைவன் கட்டளையைப்
படைவீரர் மீறுவாரோ?
பள்ளத்தில். கடல்தன்னில் வீழென்று
சொன்னாலும்
பயமின்றி வீழுவார்கள்.

பட்டாங்கில் அதுபோல உன்னுடைய உத்தரவு
பார் மீது எதுவாயினும்
பணிவோடு பயபக்தி தன்னோடு
நாங்களெல்லாம்
பண்போடு ஏற்கச்சித்தம்;

தட்டாமல் தந்தையிட்ட கட்டளையை
நிறைவேற்றத்
தயங்கினனோ பரசுராமன்
தண்ணிலவு பொழிகின்ற வெண்கதிரின்
மனமுடைய
தன்மான எம். ஜி. ஆரே!

திட்டுகின்ற பேர்களுக்கும் கட்டமுதம் இடுபவனே
சிறுபறை முழக்கியருளே !
தேன்சிந்தும் வாய்மழலை தான்சிந்தும்
எம்.ஜி.ஆர்.
சிறுபறை முழக்கியருளே !

நீயிருக்கும் இடம் எமக்குக் குற்றுலம்: உன்னுடைய
நிழலிருக்கும் இடங்களெலாம்
நீலகிரி ஏற்காடு கொடைக்கானல்
எனப்பலவாய்
நிகழ்த்தலாம் கவிதை தன்னில்!

வாயுரைக்கும் மொழியெல்லாம் கருப்பட்டி:
நின்னிதழே
வண்ணமிகு கோவை யாகும்:
வாய்த்திருக்கும் உன் விழியோ பகைவர்க்கு
வேலூராம்
வளர்நட்பில் பாலூராகும்:

நீயுதிர்க்கும் கருத்துக்கள் முத்தூராம் உன்நினைவே
நீணிலத்தில் ஸ்ரீவைகுண்டம்
நின்மேனிச் சுடரழகோ பொன்னமரா
வதியாகும்:
நின்முகமோ திருப்பூவனம்.

சேயுள்ளங் களில்சிறந்த உள்ளமுள்ளஎம். ஜி. ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!
தேன்சிந்தும் வாய்மழலை தான்சிந்தும்
எம். ஜி. ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!

செவ்வான ஒளியழகும் தென்குமரிக் கடலினிலே
செங்கதிரோன் வீழும் அழகும்
தேன்மதியம் அப்போது தோன்றுகின்ற
அழகும் உன்
சிந்தைக்கு மகிழ்ச்சி ஈயா !

ஜவ்வாது மென்மணமும் மல்லிகையின்
நறுமணமும்
ஜாதிக்காய் அளிக்கும் மணமும்
சந்தனத்தின் நல்மணமும் உன்நெஞ்சில்
மகிழ்ச்சியினைத்
தாராது தாரா தையா

கவ்வாமல் கவ்வுகின்ற வறுமையென்ற அரக்கனது
கைப்பிடியில் சிக்கிடாமல்
கவலையின்றி மக்கள்மனம் களிக்கும்நா
ளேஉனக்கு
களிப்புவரும் நன்னாளாகும்

தெவ்வர்களை என்றென்றும் ஜெயம்காணும்
எம். ஜி. ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!
தேன்சிந்தும் வாய்மழலை தான்சிந்தும்
எம். ஜி. ஆர்.
சிறுபறை முழக்கி யருளே!

சைவத்தை நிலைநிறுத்தச் சம்பந்தன் வந்ததுபோல்
தமிழ்நாட்டைத் தழைக்க வைக்க
தக்கவனே நீ வந்தாய்; உடன்பிறந்தோர் பிரிவினையால்
சமர் செய்தல் தீமைஎன்று

தெய்வத்தின் மொழித்தமிழில் கோவூர்க் கிழாரென்னும்
செழும்புலவன் கூறி வைத்தான்:
தேசத்தில் பிரிவினைகள் கிளப்புவோர் தமைஎதிர்த்து
சிங்கம்போல் குரல் கொடுத்தாய்!

கைவைக்கும் இடமெல்லாம் பொன்வைக்கும் திருவுடைய
கனிவைத்த மொழிக்குழந்தாய்
கண்வைத்தே உனைச்சிலபேர் காசினியில் சுற்றினும்
கவலையிலா மறக்குழந்தாய்

செய்வகையால் உயர்ந்திருக்கும் சிங்காரக் கண்மணியே
சிறுபறை முழக்கி யருளே
தேன்சிந்தும் வாய்மழலை தான்சிந்தும் எம். ஜி. ஆர்.
றுபறை முழக்கி யருளே!

சிறுதேர் பருவம்

உருண்டுவரும் நதிவெள்ளம் மரங்களையும்
நிலைகளையும்
உருட்டிவிடும் அது வியற்கை
உண்மையெனும் புனிதவெள்ளம் பொய்களை
அநீதிகளை
உருட்டிவிடும் அதுவு மியற்கை

இருண்டிருக்கும் மடமனத்தை அறிவுவெள்ளம்
உருட்டிவிடும்;
இரவைப் பகல் உருட்டிச் செல்லும்;
இழிவுடையோர் நடாத்திடும் பழியுடைய
ஆட்சியினை
இலஞ்சத்தை ஊழல்தன்னை

உருட்டி விடும் மக்கள்வெள்ளம்! அத்தகைய
மாவெள்ளம்
ஓருருவாய்த் திரண்டு வந்து
உன்னுருவில் நிற்பதனை யாமறிந்தோம்;
அநீதியை
உருட்ட நீ வளர்வதாலே

தெருளுற்ற மனம்படைத்த சேயான எம். ஜி. ஆர்.
சிறுதேர் உருட்டி யருளே!
தீமைகளைப் பள்ளத்தில் உருட்டிவிட
வளர்பவனே
சிறுதேர் உருட்டி யருளே!

அசனிவே கம்என்னும் அடல்களிற்ருல் சீவக
அரசனையான் கொல்வேனென
அமைச்சனவன் கட்டியங் காரனென்பான்
சூளுரைத்தான்
ஆனல்பின் அவனே மாண்டான்.

இசைவிளங்கும் இக்கதையை திருத்தக்கத்
தேவரென்பார்
எழுதிவைத்தார் சிந்தாமணியில்!
இதைப்போல உன்பெருமை குலைப்பதுவாய்
சபதமிட்டோர்
இறுதிதனை எய்தினர்கள்.

நசையுற்றுப் பொன் பொருளை அபகரித் தோடிடும்
நள்ளிரவுத் திருடரெல்லாம்
நல்லவரைத் தூற்றுதல்போல்
துரோகியெல்லாம் ஒன்ருகி
நமைத்தூற்றி திரிகின்ருர்கள்.

திசையெல்லாம் வசைபெற்ற அவர்களைநீ
உருட்டுதல்போல்
சிறுதேர் உருட்டி யருளே!
திக்கெல்லாம் இசைபெற்ற தேன்மதலை
எம். ஜி. ஆர்.
சிறுதேர் உருட்டி யருளே!

கவித்தொடரில் வெண்பாவின் புகழ்சிறக்கும்,
தலைவர்களில்
கனத்தவுன் புகழ் சிறக்கும்
கட்டளைக் கலித்துறையில் மெய்யெழுத்து
மதிப்பிழக்கும்
காசினியில் உனக்கு முன்னே

நவையில்லாத் தமிழ்நாட்டுத் தலைவர்பலர்
புகழ்மங்கும்!
நாவில்லார், சொற்போர் செயும்
நல்லறிஞர் தமைப்பழிக்க நினைப்பதுபோல்
நாட்டினிலே
நன்மைகளின் வடிவாம் உனை

செவிகைப்பப் பழிக்கின்றார்; அப்பழிகள் எல்லாமும்
தீ முன்னர்ப் புழுக்களாகும்!
சிரிக்கின்ற சிரிப்பினிலே பல்வேறு
பொருள்களைத்
திகழவிடும் எம். ஜி. ஆரே

தெவிட்டாத தமிழமுதம் வழங்குகின்ற செல்வமே
சிறுதேர் உருட்டி யருளே!
தென்பாண்டி மண்டலத்துத் தென்பாங்குப்
பூங்கவியே
சிறு தேர் உருட்டி யருளே!

பன்னீரைப் பணக்காரர் கரம்துடைக்கும்;
முகில் சிந்தும்
பனிநீரை வெயில் துடைக்கும்!
பழத்திராட்சை சிந்துகின்ற மதுநீரை
போதையிலே
பழகுபவர் கரம் துடைக்கும்!

முந்நீரைத் துடைத்துவிட யாராலும் இயலாது;
மூர்க்கர்களின் ஆட்சியாலே
முரண்பட்ட வாழ்க்கையுடன் இடர்ப்பட்டு
நிலைகெட்டு
முப்போதும் வருந்துவோரின்

கண்ணீரை உன்கரமே துடைக்குமென
அரசியல்நூல்
கற்றவர்கள் கூறுகின்றார்
கழுமரத்தில் திருடர்களை அந்நாளில்
வைத்ததுபோல்
அரசியலில் கள்வர் தம்மை

திண்ணமுடன் நீதிமன்றக் கழுமரத்தில் ஏற்றுபவன்
சிறுதேர் உருட்டி யருளே!
சித்தாந்த வேதாந்த போதாந்தம் கற்றவன்
சிறுதேர் உருட்டி யருளே!

தப்பாமல் மரமேறும் தொழிலாளர் கீழ்விழுந்து
தவறிவிட்டால் ஐயாயிரம்
தரங்கமதில் மீன்பிடிப்போர் தவறிவிட்டால்
அவர்க்காகத்
தரும்பணமும் ஐயாயிரம்

எப்போதோ ஏழைமக்கள் ஐந்நூற்றுக்
கும்குறைவாய்
இருப்போ ரிடத்தில் பெற்ற
இருங்கடனை நீக்கவே பெருங்கருணை
மனம்வைத்து
ஏற்றதோர் சட்டம்செய்த

ஒப்பாத அழகனே! உருவுடைய மாரனே
உலவிவரும் பொன் மதலாய்!
உன்பெருமை கடலளவாம்; அணுவ ளவே
யானிங்கே
உரைப்பதெலாம்! கவிதையினுல்

செப்பமுடி யாதபல திறனுடைய எம்.ஜி.ஆர்.
சிறுதேர் உருட்டி யருளே!
தென்பொதிகை அருவியைப்போல் திகழ்கின்ற
குழவியே
சிறுதேர் உருட்டி யருளே!

ஏலத்திற் போகாமல் கலைவாணர் இல்லத்தை
எடுத்துக் கொடுத்தவன் நீ
இனியகலை வாணர்பெற்ற திருமகளார்
அனைவருக்கும்
ஏற்றமணம் முடித்த வன்நீ!

பாலசுப்ர மண்யமென்ற நடிகருக்கும் அவர்போன்ற
பல்வேறு கலைஞ ருக்கும்
பல்லா யிரக்கணக்கில் பலதடவை பணம்
அள்ளிப்
பரிவோடு தந்த வன்நீ!

காலத்தின் சீற்றத்தால் கடுகிவரும் வெள்ளத்தால்
கலங்குகின்ற மக்களுக்குக்
கஞ்சிதந்தும் உடைதந்தும் காப்பவன்நீ!
காத்தவன்நீ
காருண்ய மூர்த்தி யாகி

சீலத்திற் சிறந்திருக்கும் எம். ஜி. ஆர். எனும்
வள்ளல்
சிறுதேர் உருட்டி யருளே!
சீனப்போர் நேரத்தில் தங்கவாள் தந்தவன்
சிறுதேர் உருட்டி யருளே!

நாட்டிலே கல்விதரும் நிறுவனங்கள் பலசெழிக்க
நன்கொடை அளித்த வன்நீ!
நல்லஎழுத் தாளரென்றால் அவர்களை
வளர்ப்பவன்நீ!
நல்லவர்க்கு நல்லவன்நீ!

ஏட்டிலே எழுதியே முடியாத அளவுதவி
எண்ணிறந்து செய்த வன்நீ!
எல்லாச் சிறப்பையும் பிள்ளைத் தமிழுக்குள்
எழுதுதல் இயலா தன்றோ!

பாட்டிலே அந்தாதி கலம்பகம் உலாவென்று
பாடினும் பெருமை முழுதும்
பகர்ந்திட அடங்குமோ? அதனால் ஓர் காவியம்
பாடிட எண்ணு கின்றேன்.

தீட்டிய கம்பனது சித்திரம் போன்றவன்
சிறுதேர் உருட்டி யருளே!
சிரித்த முகத்தோடு காட்சிதரும் எம். ஜி. ஆர்
சிறுதேர் உருட்டி யருளே!

இராணுவப் புரட்சியால் பதவிக்கு வருபவர்கள்
இராணுவப் புரட்சி யாலே
இறப்புலகம் காண்பார்கள்! வன்முறையே இதில்வளரும்
என்பதால் அண்ணல் காந்தி

தராதலம் மீதினில் அகிம்சைப் புரட்சியால்
சமத்துவம் காண்பதற்கு
சத்தியம் தவருத ஆன்மீக அரசியலே
தக்கவழி என்று ரைத்தார்!

மராமரம் ஏழையும் துளைத்தவன் பெயர் கொண்ட
மாணிக்கச் செம்மலே! நீ
மகாத்மா வழியிலே அரசியல் விழைந்திடும்
மனத்திற்குச் சொந்தக் காரன்

திராவகச் சொற்களை வீசாத எம். ஜி. ஆர்
சிறு தேர் உருட்டி யருளே!
சீனத்துக் கண்ணாடி போல்மேனி கொண்டவன்
சிறு தேர் உருட்டி யருளே!

பச்சிலையில் இளநரம்பு கிளைநரம்பு படர்ந்திருக்கும்;
பைந்தமிழர் நெஞ்சி லதுபோல்
பரவிநிற்கும் இளமதலாய்!
பண்பட்ட நடிகர்களில்
பணம்சேர்த்த நடிக ரைத்தான்

இச்செகத்தார் அறிவார்கள்! உன்னைப்போல்
நாட்டுக்கு
இணையிலாத் தலைவரான
எழில்நடிகர் யாரையும் இப்புவி அறிந்ததில்லை
இப்போது நின்னை யறிந்தார்.

அச்சாணி இல்லாமல் கோயிற்றேர் ஓடாது!
அண்ணாவின் கொள்கைத் தேரை
அச்சாணி போலிருந்து ஓடவைக்கும் வீரன்நீ!
அடாதன செய்வோர் தமை

சிச்சிச்சீ என்றுமிழ்ந்து செருக்கொழிய உருட்டுபவன்
சிறு தேர் உருட்டி யருளே!
தேசமெல் லாம்கமழும் வீசுபுகழ் எம். ஜி. ஆர்.
சிறு தேர் உருட்டி யருளே!

இலக்கணம் பிழைபடா தெழுதும்என் கவிதையில்
எரிச்சலைக் கொண்டவர்கள்
ஏதேதோ சொல்வார்கள்; அழுக்காறும்
வெகுளியும்
இதயத்துள் வளர்வதாலே !

விலக்கினும் விலக்காமல் என்னுள்ளே உறைகின்ற
வீரத்தின் மைந்தனே ! நல்
வித்தகனே! நண்பர்க்குப் பொன்வளைவும்
பகைவர்க்கு
வில்வளைவும் காட்டும் பிள்ளாய் !

மலர் மனத்தோய்! உன்படங்கள் இல்லாத
இல்லம்இம்
மாநிலத்தில் எங்கும் இல்லை.
மறத்தமிழர் இதயத்தின் நாதமென
விளங்குகின்ற
மாணிக்கமே; வெற்றித்

திலகத்தின் அடையாளம் என விளங்கும்எம். ஜி ஆர்
சிறுதேர் உருட்டி யருளே !
செல்வத்தின் செல்வமே தெய்வத்தின்தெய்வமே
சிறுதேர் உருட்டி யருளே!

—நிறைவு—

எமது அடுத்த வெளியீடு!

கவிஞர்

முத்துலிங்கம்

எழுதிய

"எம். ஜி. ஆர். உலா"

★

புரட்சித் தலைவர்

எம்ஜிஆர் பிள்ளைத்தமிழ்

கவிஞர் முத்துலிங்கம்